
# வெளிச்சம்

20/=

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
5 - 8 - 1993
யாழ்ப்பாணம்



வீடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

மங்கள வைபவங்களை
நீடித்து வைப்பதற்கு வீடியோப்பதிவு மிகநன்று.

சிறந்த முறையில் வீடியோப்படப்பிடிப்பு
செய்து தருபவர்கள்

## எவர் விஷன்

**21, மணிக்கூட்டுவீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

புதிய புதிய புடைவைகளை விருப்பப்படி தெரிவு செய்யுங்கள்.
நவீன ஆடைகள், இறக்குமதி செய்யப்பட்ட துணிகள்
எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள

## சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

**41, பெரியகடை,**
**யாழ்ப்பாணம்.**


---

உங்கள் அனைத்துத் தேவைகளையும்
நிறைவேற்றும் நிறுவனம்

## தமிழருவி

**74, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

நூலகம்
மாநகராட்சி மன்று
25 - 8 - 1993
யாழ்ப்பாணம்



நெஞ்சை நிமிர்த்தி
எம் நிலம் எழுந்து போராடும்.
அஞ்சற்க! என்று அறிவித்து
எம் பிள்ளைகள்
நிலத்தில்
வான் பரப்பில்
நீலத் திரைக்கடலில்
பலத்தோடு வந்து பார்க்கும் எதிரிகளை
கலக்கியடித் தெம்மைக் காப்பாற்றும் காலமிது.
தாயென்றும், தளிரென்றும்
தள்ளாடும் கொடியென்றும்
பூவென்றும் முன்னைப் புலவர்களால்
உவமை சொன்ன
பெண்ணும் எழுந்து போராடும் நேரத்தில்
இன்னும் இதைப்பாட எண்ணாத பாவலரின்
கண்கள் திறக்கும் காலமினி எப்போது?
விலைபேச முடியாத வீரங்கள்
களமாடிச்
சிலையாகி நிற்கும் தேசத்தில்
இன்னும் தான்
முலைபார்த்து
வெண்பா முன்னூறு எழுதுகின்ற
மனிதா!
உனக்கென்று மானத்தின் பொருள் விளங்கும்?
இனிதா உனக்கிந்த இழிநிலை?
விழிதிறவாய்!
கவிஞா! எழு
இந்தக் காலத்தைப் பதிவு செய்.

—மாலிகா—

□ □

வெளிச்சம்

ஆவணி—1993

இதழ்—17

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

தொடர்ந்தும் எம்மண்ணின் வான்பரப்பின்மீது இயந்திர வல்லூறுகள் வட்டமடிக்கின்றன. குண்டுவீச்சு விமானங்கள் கோரக் கொலைவெறிகொண்டு ஊழிக்கூத்தாடுகின்றன. வீதிகள், வீடுகள், கோயில்கள், வயல்வெளிகளென்று இலக்கு ஏதுமற்று சகட்டுமேனிக்கு குண்டுகளை வீசிவிட்டு சில புலிகளையாவது அழித்துவிட்டோம் என்ற பொய்யான திருப்தியுடன் நகருகின்றன.

கிளாலிக் கடல்நீரேரி தமிழனின் குருதிகலந்து சிவப்பாகத் தெரிகிறது. பச்சைத் தமிழனின் இரத்தம் அவன் மண்ணிலேயே உலர்ந்துபோயிருக்கிறது. அப்பாவித் தனமாக ஏன் சாகிறோம் என்பது கூடத்தெரியாமல் தினம் தினம் தமிழன் சாகடிக்கப்படுகின்றான்.

படகிலேறி கறுப்புச்சட்டைக்காரன் ஒருவன் வாளெடுத்து வெட்டினானாம். ஐயோ என்ற அவலக்குரல் அந்தப் பிரதேசமெங்கும் எதிரொலித்ததாம்.

தென்தமிழீழத்தில் தமிழ் அறிவுஜீவிகள் அடிக்கடி காணாமல் போய்விடுகின் றனர். அவர்கள் திரும்பிவரும் செய்தி அதிகமாக வருவதேயில்லை. இப்படி ஏன் நடைபெறுகின்றன? வேர்களை வெட்டி, விழுதுகளைக்காயப்போட எதிரி எண்ணுகின்றான்போலும். சுற்றிவளைப்பு, விசாரணைக்காக அழைத்துச் செல்லல், முகாமில் தடுத்துவைத்தல் என்பதெல்லாம் சிங்களப் பேரினவாத அரசின் அகராதியில் கொல்லப்படுவதைக் குறிக்கும் புதிய பதங்கள்; குறியீட்டுச் சொற்கள்.

கொழும்பு கதிரேசன் கோயிலில் உற்சவ நேரத்தில் குண்டு வெடிப்பு. இது சரணாலயம் தேடிய தமிழ்ப் பறவைகளின் சிறகை வெட்டும் முயற்சி என்பது அங்குபோன எம்மவர்களுக்குப் புரியுமா? எம் சொந்தக் கூடுதான், எமக்குப் பாதுகாப்பு என்பது அவர்களுக்கு என்றுதான் தெரிய வருமோ?

இங்கிருந்து அகதியாக மேற்குலகம் சென்றவர்களும் அங்கு அந்தரிக்கின்ற னர். ஆசிய நாட்டவர்களையே அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம். மாற்றான் வீட்டு முற்றத்தில் கோலம் போட்டு பிடியரிசிப் பொங்கல் பொங்குவது இன்னும் எத்தனை காலத்துக்கு? 'காஸ் குக்கர்' சமையல்காரன் வீட்டில் விறகுவைத்து அடுப்பு மூட்டினால், அவன் கண்களில் எரிச்சல் வருவது தவிர்க்கமுடியாததுதானே. புகையே அங்கு பகையாகிவிட்டது. அவன் ஆத்திரப்படுவது நியாயம் தான். இது, அங்குபோன நம்மவர்களுக்கு ஏன் புரியாமல் போனது? வேலி யற்ற காணியென்றாலும் எங்கள் தாயகம் உறுதிக்காணி.

அரண்மனையென்றாலும் ஐரோப்பிய நாடுகள் வாடகை வீடுகள்தானே.

இது 'சில்லுப் பூட்டிய சிவப்பு சூட்கேசுக்காரர்களுக்கு' விரைவில் விளங்கினால் நன்று.

இவற்றைச் சொல்வதற்கு, வெளிச்சத்துக்கு 'உறவுமுண்டு, உரிமையுமுண்டு.' எம்மினத்தின்மீது எதிரி திட்டமிட்டு நடாத்தும் வதைகள், வளங்குறைப்புக்கள் அனைத்தும் விடுதலையை, எம் போராட்டத்தை விரிவுபடுத்தும், விரைவுபடுத்தும் காரணிகளாகக் கருதிக்கொள்ளுவோம்.

எனவே, எங்கள் தாயகமண்ணின் விடுதலையை விரைவுபடுத்தி வெல்ல வேண்டிய பாரிய பொறுப்பு எங்கள் தலைமுறைக்கேயுண்டு. அஞ்சலோட்டம் போல தடியை அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைத்துவிட்டு நாம் ஓயமுடியாது. இந்தப் போராட்டத்தை தொடங்கவேண்டிய காரணிகள் எங்கள் தலைமுறையின் கழுத்தைத்தான் நெரித்தன. அதனால் இந்த விடுதலைப் போரை ஆரம்பித்தது எங்கள் தலைமுறைதான். எனவே நாமே போராட்டத்தை வென்று முடித்து வைக்கவேண்டிய பொறுப்பும் எமக்குண்டு. முடியாமல் போனால் மட்டுமே அடுத்த தலைமுறை தொடரவேண்டும். எம்மால் எப்படி முடியாமல் போகும்?

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவனே களத்தில் நின்று படை நடத்திக்கொண்டிருக்கும் போது எப்படி எமது போர் வெல்லாமல் போகும்?

நிலை தளராது நிற்பதால் எவராலும் விலைபேசமுடியாத எங்கள் தலைவனே கை உயர்த்திக் கட்டளை இடும்போது, எமது விடுதலை எப்படிக் கைகளுக்கு எட்டாமல் போகும்?

கரும்புலிகள், தம்மையே தற்கொடையாக்க விடைகேட்டு விண்ணப்பித்துக் கொண்டிருக்கும் போது எங்கள் விடுதலையை வெல்லாமல் விடுவோமா?

முப்பது நிமிடத்தில் எதிரியின் முழுமையான தங்ககத்தை தரைமட்டமாக்கும் வேங்கைகளுக்கு எவர்தான் ஈடுகொடுத்து எதிர்நிற்கமுடியும்?

நாங்கள் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். எம்மண்ணின், இனத்தின் விடுதலைக்கான போருடன்இன்னுமின்னும் இறுக்கமாகஇணைந்துகொள்வதுதான். கலை, இலக்கியப் படைப்பாளிகள் 'அப்படி ஆகுமோ; இப்படிப் போகுமோ' என்று அங்கலாய்ப்பதை விட்டு வெல்வோம் என்ற நம்பிக்கையுடன் விடுதலை தேடும் வேங்கைகளுடன் இணைந்து நிற்பதே இந்தப்போரை வெல்வதற்கான நமது பங்காகும்.

'வெளிச்சம்' இதையே எமது கலை, இலக்கியப் படைப்பாளிகளிடமிருந்து எதிர்பார்க்கிறது.



# எமது மண்ணில் எமது கால்களில் தங்கிநிற்போம்

**தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

நீண்ட நெடுங்காலமாக எமது தாயகப்பூமி ஒரு தன்னிறைவான, தங்கு நிலையற்ற பொருளாதார வாழ்வுடைய செழிப்பான நாடாக விளங்கி வந்தது. அந்நிய காலனித்துவ ஊடுருவல்கள் எமது சுதேசிய பொருளாதாரக் கட்டுக் கோப்பை சீர்குலைத்தன. வெளிநாட்டுப்பண்டங்களும், அந்நிய நுகர்வுப் பழக் கங்களும் எமது மக்கள் மீது திணிக்கப்பட்டன. ஆங்கில ஏகாதிபத்தியம் பெருந் தோட்டப் பொருளாதார அமைப்பை உருவாக்கி, ஒற்றையாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தி, கொழும்புச் சந்தையை மையப்படுத்தியது. இதனால் தமிழீழப் பொருளாதாரம் தனது தனித்துவத்தை இழந்து சீர்குலைந்தது. கொழும்புச்சந் தைக்கு அடிமைப்பட்ட தங்குநிலையான பொருளாதார வாழ்வில் தமிழீழ மக்கள் சிக்குப்பட்டனர். சிங்கள ஆளும் வர்க்கம் இந்த தங்குநிலையான பொருளா தாரத்தை ஊக்குவித்து வந்தது. பொருளாதார ரீதியில் தமிழர்கள் தென்னிலங் கையில் தங்கியிருக்கும்வரை தன்னாட்சி உரிமைப்போராட்டம் வெற்றி பெறாது என்பது சிங்களப்பேரினவாதிகளின் கணிப்பீடு. இதனால்தான், காலத்திற்குக் காலம், வீடுதலைப்போராட்டம் கூர்மையடையும்போது தமிழர்கள்மீது பொரு ளாதார நெருக்குதல்களை உண்டுபண்ண சிங்கள அரசு தயங்குவதில்லை. இம் முறை இந்தப்பொருளாதார நெருக்குதல் என்றுமில்லாதபடி தீவிரமாக்கப்பட்டி ருக்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் இந்தப் பொருளாதார அச்சுறுத்தல் எமது வீடு தலைப் போராட்டத்திற்கு ஏற்பட்டுள்ள மாபெரும் சவாலாகும். இந்தச் சவாலை நாம் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டும். எமது மண்ணில், எமது கால்களில் தங்கிநிற்கும் தன்னிறைவான வாழ்வை நாம் கட்டியெழுப்ப வேண்டும். இது இன்றைய வரலாற்றுத்தேவையும் கூட.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

('அர்ச்சயா' முதலாண்டு நிறைவு மலருக்கு வழங்கிய வாழ்த்துச்செய்தியிலிருந்து)



# நிகழ்காலம் நிமிரட்டும்

புதுவை இரத்தினதுரை

முந்நூறு வருடத்து முதுகுக் கூனலை
இன்றேனும் நிமிர்த்தி எழு!
உன் தாய் மண்ணோ
கண்ணீரைச் சிந்திக் கலங்கிறது.
தமிழனே!
இன்னும் உறக்கத்தில் இருக்கின்றாய்.
எழு மகனே!
ஆர்வந்து ஆண்டாலும்
அவனுக்கு அடிமையென்று
பேர்பதிந்துவிட்டுப் புதுச்செருப்பாய் நீயானாய்
'போர்த்துக்கீசன்' வந்து புகுந்தான்
நீபேசாமல்
சோற்றுக்காய் தானே சுருண்டு கிடந்திட்டாய்.
'ஒல்லாந்தன்' வந்து உட்புகுந்த வேளையிலும்
வில்லேந்த வில்லை
நீ விழுந்தே படுத்திருந்தாய்.
'வெள்ளைத் தோலோடு வேறொருவன்' வந்தானே
துள்ளி எழுந்தாயா?
இல்லை,
துடிப்படங்கிப் பேரயிருந்தாய்.
சிங்களவன் வந்துன் சிம்மாசனம் பறித்தான்
பொங்கி எழுந்தாயா?
இல்லை,
பேசாமல் படுத்திருந்தாய்.
காற்சட்டை போட்ட காவலர்கள்
வரும்போது

6

மேற்சால்வை எடுத்து முன்குனிந்தாய்.
முடியுமெனில்,
சாப்பாடும் போட்டாய்;
தங்கத்தில் பரிசளித்தாய்.
"தமிழா உனக்கேது தாய் நாடு"
என்று எதிரி
விழிபிடுங்கி உன்னை வெட்டினான்.
விழித்தாயா?
வீடெரித்து உன்னை விரட்டினான்,
நீ மீண்டும்
வாடகைக்குத் தேடி 'வத்தளை'யில் வீடெடுத்தாய்.
'கள்ளத் தோணி'
என்றுன் காதுபடச் சொன்ன பின்பும்
'வெள்ளவத்தை'
உனக்கு "வேடந்தாங்கல்" ஆனதடா
அன்னை உனக்களித்த அமுதமுலைப் பாலருந்தி
என்ன பயன்?
நீ சேற்று எருமையெனக் கிடப்பதற்கா
உன்னை வளர்த்தாள்?
உனக்கு உணர்வுவரும் எப்போது?
கண்ணெதிரே பார்
சின்னக் காலால் நிலம் மிதித்து
"குட்டிப்புலி" நடக்கக் குளிர் நிலவு சிலிர்க்கிறது.
இட்ட அடிக்குள்ளே எல்லாம் அடங்கிறது.
கண்ணில் இளங்கதிர்கள் காலிக்க
அந்தோ பார்
விண்ணைத் துகள் செய்து
"வேங்கைப் பெண்" நடக்கின்றாள்.
காற்றே கைகட்டி
அவள் காலடியில் நிற்கிறது.
நேற்றுப்போல் இனியும்
நீ கலங்கத் தேவையில்லை
நாடி நரம்புகளைச் சூடேற்று
இது வரையில்
வாடிப் போயிருந்த வரலாற்றின்
அடிவேரில்
நீரைத் தெளி
உந்தன்
நிகழ்காலம் நிமிரட்டும்.

□□

கடந்தமாத 'வெளிச்சம்' இதழில் சபா-ஜெயராசா அவர்கள் எழுதிய 'தவில்-நாகசுர இசைவடிவங்கள் - ஒரு மீளாய்வு' என்ற கட்டுரை தொடர்பான சில சிந்தனைகள்:



# தவில் - நாகசுர இசைவடிவங்கள் பற்றி...

சி. இலங்கேசன்

நாக வழிபாட்டுடன் தொடர்புடைய தாகக் கருதப்படும் நாகசுரமானதின் தோற்றம் தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்தில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கட்டுரை கூறிச்செல்கின்றது இவ்வாறு தோற்றம் பெற்றதான நாகசுர மானது எவ்விதம் இங்கு (ஈழத்தில்) தொடர்புடையதாகப்பட்டது என்று மேலும் சொல்லிச் சென்றிருக்கலாம். ஏனெனில் ஈழத்திலும் தவில் - நாகசுர இசை வடிவத்தின் தொடர்பு முறைமை ஒரு பண்பாட்டு அம்சமாகத் தொடர்ந்து நிலவி வருகின்றது. எனவேதான் மேற் குறிப்பிட்ட தவில் - நாகசுர இசை வடிவத் தின் பரம்பல், ஈழத்தில் எவ்விதம், எக் காலத்தில் ஏற்பட்டதென அறிய வேண்டிய தேவையானது மேற்கிளம்புகின்றது.

ஈழத்திலும் 'நாகர்' வாழ்ந்தனர் என வரலாற்றுமூலங்கள் வாயிலாக அறியப் பட்டிருப்பதால் மேற்சொன்ன கட்டுரையின் தரவுகளில் மேலதிகமான கேள்விகளும் எழுகின்றன.

இவைதவிர, தவில் - நாகசுர இசையின் பாரம்பரியத்தை அதிகமான அளவுக்கு தமிழகத்தோடு இணைத்துத்தான் கட்டுரை யாசிரியர் குறிப்பிட்டுள்ளார். கட்டுரையில் குறிப்பிட்டுள்ள தவில் - நாகசுர வித்வான் கள் இசை மேதைகள்தான்; கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி அவற்றில் வேறு மறுப்புக் கிடையாது. ஆனால் ஈழத்திலும் தவில்-நாகசுர வித்வான்களின் பாரம்பரியம் இருந்து வந்துள்ளது. இன்றைக்கும் அந்த மரபின் நீட்சி தொடருகின்றது. அந்த விபரங்கள் குறிப்பிட்டிருக்கப்படவில்லை.

எமது பண்பாட்டு நிகழ்வுகளிலும், சாதாரண வாழ்வோடிணைந்த சடங்குகள், வைபவங்கள் போன்ற வேளைகளிலும் தவில் - நாகசுர இசையின் தொழிற் பாட் டுத் தொடர்ச்சி நிலவுவதைக் காணலாம். எனவே சபா - ஜெயராசா அவர்கள் இவை தொடர்பான தரவுகளை அல்லது கருத்துக் களை மேலும் குறிப்பிட்டிருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

அத்துடன் சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் கூட நாளாந்த நிகழ்ச்சிகளின் போதே (நிகழ்ச்சி ஆரம்பம் உட்பட) தவில்- நாகசுர இசையுடன் ஒன்றி யுள்ளன என்ற கருதுகோளையும் குறிப் பிடும்போது (மாதிரிச் செய்தியாக இது இருப்பினும்) இன்று சர்வதேச ஒலி பரப்புச் சேவையில் ஈடுபட்டுள்ள B. B. C

தமிழ் நிகழ்ச்சி ஆரம்பத்தின்போது தவில், நாதசுர இசைப்பிரவாகத்துடன்தான் தொடருகின்றது என்பதையும் குறிப்பிட்டிருந்தால் நன்று.

திரை இசைப் பாடல்களிலும், தனி இசைத் தட்டுக்களிலும் நாதசுர இசை பதியப்பெற்று இரசிக்கப்பெற்றுள்ளன என்னும்போதும், இன்னொரு விடயமும் நினைவுக்கு வருகின்றது. இங்கும் விடுதலைப் போராட்டப்பாடல்கள் பல வெளிவந்துள்ளன. அவற்றில் பல பாடல்களில் தவில் - நாதசுர இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த தாயக விடுதலைப் பாடல்களின் தேர்ந்த ஒரு தொகுதியாக 'இசையருவி' என்ற ஒலிப்பதிவு நாடா பிரத்தியேகமாக தவில், நாதசுர இசையில் (சில வாத்தியக் கருவிகளின் துணையோடு) வாசிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவற்றுடன், அரங்குகள் மற்றும் வீதி நிகழ்வாகவும் தாயக விடுதலைப் பாடல்கள், நாடகங்கள் என்பன தவில் - நாதசுர இசையோடு நிகழ்த்தப்படுகின்றன. இவற்றில் ஒரு நிகழ்ச்சி எனக் குறிப்பிடுவதானால் அண்மையில் நிகழ்த்தப்பட்டுவந்த 'ஊரெங்கும் போர்ப்பாட்டு' என்ற நிகழ்ச்சியைச் சொல்லலாம். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கவிஞர்களின் பாடல்கள் தவில், நாதசுர இசைவடிவங்கள் மூலமாக மக்கள் மயப்படுத்தப்பட்டன என்ற தகவல் வருகின்றது. இவற்றுடன் மேற்சொன்ன விடயங்களையும் குறிப்பிட்டிருப்பின் அக் கட்டுரையின் முழுமை கிட்டியிருக்கும். இவை எல்லாவற்றினதுடனும், 'மஹாகவி'யின் ''கோடை'' நாடகம் தவில் - நாதசுரத்தின் பிரதான இணைவுடன்தான் நிகழ்த்தப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கது.

தவில் – நாதசுர இசைக் கருவிகள் சமூக நிலையில் எவ்விதமான நிலையைப் பெற்றன, எவ்விதமான அம்சங்களுடன் இணைந்துள்ளன என்று பார்க்கும்போது இவற்றையும் இணைத்துப் பார்த்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. எனவே அக்கட்டுரையின் தொடர்ச்சியாக அல்லது தொடர்பாக இன்னும் அவற்றின் சிறப்பியல்புகளுடன் அவை இணைந்து தொழிற்படும் வேறு அம்சங்களையும் எமது வாழ்வியலில் தவில் - நாதசுரத்தின் இன்றைய பயன்பாடு (தொழிற்பாடு) எத்தகையது எனவும் தந்தால் மேலும் புதிய விடயங்களை அறியவும், புதியனவற்றைச் சிந்திக்கவும் உதவும்.

எமது பாரம்பரியமான, தனித்துவமான தவில் - நாதசுர இசைவடிவங்கள் பற்றிச் சிந்தித்தமைக்காக சபா - ஜெயராசா அவர்களும், 'வெளிச்சம்' ஆசிரிய குழுவினரும் பாராட்டப்படவும், நன்றிக்கும் உரியவர்களாவர். மேலும் இவ்வாறான புதிய சிந்தனைக்கேற்ற கருத்துக்கள் தொடரப்பட வேண்டும். □

□ □ □ □

''வெளிச்சம்''
கலை, இலக்கிய சமூக இதழ்

உருவாக்கம்:
ஆசிரியர் குழு

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

ஓவியம்:
தயா

அச்சு:
ம. மரியதாஸ்

வெளியீடு:
விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்

# இனங்கண்டபின்...

குரும்பசிட்டியூரான்

"அகதி முகாமெண்டுக்கை கொட்டில் ஒண்டைப்போட்டு சீவிச்சாலும் எவ்வளவு நிம்மதியா இருந்திருக்கலாம். இஞ்சை வந்து...''

பாக்கியம் வறுத்துக் கொட்டத் தொடங்கி விட்டாள். அவள் ஆத்திரத்தில் இப்படிக் கொட்ட ஆரம்பித்து விட்டாளெண்டா, அதன் அர்த்தம் வீட்டுச் சொந்தக்காரி பூமணி வம்பளப்பதற்கு வெளியே போய் விட்டாள் என்பதுதான். இப்பிடியான இடை நேரங்களில் தான் தன்னுடைய மனப்புழுக்கத்தை இவளால் கொட்டித் தீர்க்க முடியும்.

''கேட்டியளே... எங்கடை மூத்தவளும் இளையவளும் அண்டைக்குச் சிரிச்சுச் சிரிச்சு எப்பன் பிலத்துக் கதைச்சதுக்கு, அவ வீட்டுக்காற நாச்சியார் கதைச்சகதை உங்களுக்குத் தெரியுமே ..?

''எனக்கொண்டும் தெரிய வேண்டாம்''

சண்முகத்தின் நறுக்கான பதில் பாக்கியத்துக்குச் சற்று ஏமாற்றத்தைக் கொடுத்தது. தன்னுடைய கதையைக் கேட்டவுடன் பொங்கி எழுந்து போர்க்கோலம் கொள்ள வேண்டிய தன் கணவன், பொறுமையைக் கடைப்பிடிக்கிறானே என்று பாக்கியம் எரிச்சல் பட்டாள்.



''என்ன கதைச்சாலும் நீங்க குனிஞ்சு இருக்கிறதைக் கண்டுதான் அவையும் எங்களிலை குட்டிக்கொண்டிருக்கினை. நீங்களும் இதெல்லாத்தையும் பாத்துக்கொண்டு...''

''அப்பென்னப்பா, வீட்டுக்காற மனிசியோடை என்னை மல்லுக்கட்டச் சொல்லீறியோ? இடம் பெயர்ந்த சனங்களெல்லாம் ஒரு விறாந்தை கிடைச்சாலே போதும் எண்டு ஓடித் திரியிற நேரத்திலை...''

''எங்கடை பொன்போலை பூமியை விட்டிட்டு வெளியிலை வந்தா எத்தினை எத்தினை துன்பங்களை நாங்கள் காவவேண்டிக்கிடக்குது ..''

பாக்கியம் விம்மத் தொடங்கி விட்டாள். அவளுக்கு ஊர் நினைப்பு வந்துவிட்டது.

''பாக்கியம் சொல்லிறதைக்கேள். முகாமுக்குப் போக விரும்பாத அகதியல்ல நான். ஒரு காலும் கையும் வழங்காமை, மலமும் சலமும் படுக்கையிலை போற என்ரை அண்ணருக்காண்டித் தான் இந்த வீட்டை நான் எடுத்தனான். இங்கை நடக்கிறதைக் கண்டு நான் கண்ணை மூடிக்கொண்டு இருக்கையில்லை. எந்த அவமானத்தையும் என்ரை அண்ணருக்காண்டி நான் தாங்கத்தான் வேணும். சின்னனிலை தகப்பன் இல்லாத பிள்ளையளா வளந்த எங்களை வளத்தெடுத்தது அண்ணர்தான். எங்களுக்காண்டி கலியாணம் கட்டாமைத் தன்ரை சந்தோசங்களை இழந்து...''

சண்முகத்தின் தொண்டை கரகரத்தது. அவனால் அதிகம் பேச முடியவில்லை. உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவன் குரல் தழதழத்தது.

''அதாலைதான் சொல்லிறேன். இங்கை நடக்கிற பிழையளைச் சொல்லிச் சொல்லி என்ரை மனத் திலை ஆத்திரத்தை... ஆவேசத்தைத் தந்தியோ...?''

அவனுடைய வார்த்தைகள் சூடேறிப் போய்க்கொண்டிருந்தது அவளுக்குத் தெரிந்தது. தோய்க்க வேண்டிய துணி மணிகளையும் எடுத்துக் கொண்டு புத்தியாகக் கிணற்றடிப் பக்கமாக நடக்கத் தொடங்கி விட்டாள்.

சண்முகம் சைக்கிளைப் பூட்டி விட்டுத் திண்ணையில் வந்து இருந்தான். உள்ளே அவனுடைய அண்ணன் கோவிந்து படுக்கையில் உழண்டு கொண்டிருந்தான். வலியினால் அண்ணன் கத்துவது சண்முகத்துக்கு வேதனையைத் தந்தது. சலம் எடுக்கும் பேசினைத் துப்புரவாக்கி வைத்துவிட்டு படுக்கையில் அண்ணனின் விலகியிருந்த சாரத்தைச் சரி செய்தான். இந்த நிலையை நினைத்து குமுறிக் குமுறி அழவேண்டும்போல அவனுக்கு இருந்தது. தாயின் மடிபோல இருந்த தன் சொந்த மண்ணை விட்டு விட்டு ஓடி வந்ததால் ஏற்பட்ட வேதனையும், அந்த மண்ணை நினைத்து நினைத்தே ஏங்குகின்ற அவனுடைய அவலமான வாழ்வும் அவனுடைய உள்ளத்தை ஊசி போலக் குத்திக் குத்திக் கிளறிக் கொண்டிருந்தது. அந்தக் கோணாவளை மண்ணிலே போய் விழுந்து உருள வேண்டும்போல அவனுக்கு இருந்தது.

□

கோணாவளை மண் என்றைக்குமே சண்முகத்தை வஞ்சித்ததில்லை. அந்தச் செம்பாட்டு மண்ணை அவன் கொத்தக் கொத்த பூமித் தாயும் அவனுக்கு பசுமையை மண்ணிலே பதித்துக் கொண்டே இருந்தாள். பணம் புரண்டது. குத்தகைக் காணிக்குள் கொட்டில் ஒன்றைப் போட்டு அதற்குள் சீவித்துக் கொண்டு அதே காணிக்குள் தோட்டம் செய்துகொண்டிருந்தவன் தன்னுடைய உழைப்பால் நாற்பது பரப்புக் காணி வாங்கினான். எட்டறையில் ஒரு பென்னாம் பெரிய வீட்டைக் கட்டினான். மீண்டும் கலவரம் வெடித்தபோது, அவனுடைய கண்ணுக்கு முன்னாலேயே அவனுடைய அரண்மனை போன்ற வீடு விமானக் குண்டுவீச்சினால் சின்னா பின்னமாகச் சிதறியபோது அவன் மனம் அழுதது. ஊருக்குள் ஆமி நுழைகிறான் என்பதை உணர்ந்த போது பொருள் பண்டம்... எதையுமே காவ அவன் முற்படவில்லை. கைகால் வழங்காத தன் அண்ணனையே முதலில் காவித் தன் தோளில் போட்டான். பாக்கியமும் பிள்ளைகளும் நகைகளை எடுத்துக்கொண்டு தப்பி வந்து சேர்ந்தார்கள்.

பூமணி, சண்முகத்துக்கு ஒரு வகையில் உறவுக்காரி. சண்முகம் கோணாவளையில் பெரிய விலாசமாகத் தோட்டம் செய்த நேரம், காசு களஞ் செண்டு பூமணி, சண்முகத்திடம் மாறுவது உண்டு. பழைய விலாசத்தை வைத்து திக்கற்ற நிலையில் வந்த சண்முகத்தின் குடும்பத்துக்கு பூமணி தன் வீட்டில் இடந்தந்தாள். கோவிந்துவின் வருத்தச் செலவுகள், வீட்டுச் செலவுகள் இவற்றைச் சமாளிக்க நகைகள் ஒவ்வொன்றாகக் கழட்டப்பட்டு கடைசியில் பாக்கியத்தின் தாலி மாத்திரமே மிஞ்சி இருந்தது. மனைவியின் வெறும் கழுத்து எத்தனையோ

தடவைகள் சண்முகத்தை பயமுறுத்திய போதிலும் 'எண்டைக்கோ ஒரு நாளைக்கு அந்த மண்ணுக்குப் போய் உழைக்கப் போகிறோம்' என்ற ஒரு நம்பிக்கை அவனுக்கு ஆதரவாக இருந்து வந்து கொண்டிருக்கிறது.

சண்முகத்தின் கையில் ஒன்றும் இல்லை என்ற நிலை வந்ததும், வீட்டுச் சொந்தக்காரி பூமணி, அவனை ஒரு வேலைக்காரன் போலவே நடாத்த ஆரம்பித்தாள். தன்னுடைய அண்ணனுக்காக சண்முகம் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டே வந்தான்.

இன்றைக்குக் காலையில் கோவிந்து படுத்திருக்கும் இடம் துப்பரவாக இல்லை... துண்டுகள் துணியள் ஒழுங்காகத் தோய்ப்பதில்லை... படுக்கைப் புண்... இப்படிப் பலவிதமாகப் புறணி பாடிக்கொண்டிருந்தாள் பூமணி.

உலாத்தை முடித்துக்கொண்டு வெத்திலையையும் வாய்க்குள் போட்டுக் கொதுப்பிக் கொண்டு 'பொளிச்' என்ற சத்தத்துடன் துப்பிய சத்தம், சண்முகத்தின் நினைவுத் திரையை அறுத்தது.

''சண்முகம் - என்ன கொண்ணரைக் கொண்டு போற எண்ணம் இல்லையோ?''

''ஆசுப்பத்திரிச் செலவுக்குக் காசில்லை... நாளைக்குப் பாப்போம்...''

''நாளைக்கு நாளைக்கெண்டு உப்பிடி எத்தினை நாளையை நானும் கண்டிட்டேன். இப்பவே சொல்லியாச்சுது. கொண்ணர் மண்டையைப் போட்டாரெண்டா, செத்த வீட்டை இஞ்சை வைச்சுச் செய்யலாம் எண்ட எண்ணத்தை மாத்திரம் மனதிலை வைச்சிருக்காதை...''

— பூமணியின் வார்த்தைகள் சண்முகத்தை ஒரு கணம் நிலை தடுமாற வைத்தன.

''பக்கத்துக் கோயில் கொடி ஏறப் போகுது... பதினைஞ்சு நாள் திருவிழாவுக்கு விரதம் பிடிக்க எண்டு கொழும்பிலை இருந்து பிள்ளை வரப் போறாள். பேந்து இஞ்சை வைச்சு செத்த வீட்டுக் கிறித்தியங்களை வைக்கலாம் எண்டுஎண்ணாதை...''

வேறு வீடுபார் என்று சண்முகத்துக்குப் பூமணி சொல்லாமல் சொல்லி விட்டாள். இந்த நிலைமையில், இந்த அதிரடித் தாக்குதலை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

தூரத்தே வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன.

''பிள்ளையளே... நாளுக்கு நாள் வீரமரணம் அடைஞ்சு போறியளே... உங்கடை இரத்தத்தாலை குளிப்பாட்டி எடுக்கப்போற இந்த நிலம்... இவர்களைப் போலை ஆக்களையும் தாங்கிறதுக்கோ''

— தன் மனதைக் கேட்டான். சண்முகத்துக்குச் சரியான விடை கிடைக்கவில்லை.

□

''எண்டைக்கோ ஒரு நாளைக்கு என்ரை நிலத்திலை போய் தோட்டம் செய்யத்தான் போறேன். முந்தி உழைச்சதில் பல மடங்கா உழைப்

பேன் எண்ட நம்பிக்கையும் மனத் தைரியமும் என்னட்டை இருக்கு. அந்த நேரம் உங்கடை கடனைத் திருப்பித் தருவன். இப்ப என்ரை நிலைமை மோசமா இருக்கு. எனக்கு உதவுங்கோ......''

— இப்பிடிச் சொல்லிச் சொல்லித் தெரிந்தவர்களிடம் கைமாற்றாக்கடன் வாங்கினான். சண்முகத்தின் நாணயத்தையும் கோவிந்துவின் பரிதாப நிலையையும் உணர்ந்த கோணாவளையைச் சேர்ந்த சிலர் அவனுக்கு உதவினார்கள். ஐயாயிரம் ரூபா அளவுக்கு அவனுக்குச் சேர்ந்தது. அது இப்போதைப் பாட்டுக்கு அவனுக்குப் போதும். இனி அவனை எதிர்நோக்கிக் கொண்டிருப்பது வீட்டுப் பிரச்சனைதான். அண்ணன் உயிரோடு இருக்கிற கொஞ்ச நாளும் ஆஸ்பத்திரியிலை இருக்கலாம். செத்தால் .. செத்த வீடு எங்கே வைத்துச் செய்வது என்ற பிரச்சனை அவனைப் பூதாகாரமாகப் பயமுறுத்திக் கொண்டிருந்தது.ஆஸ்பத்திரியில் உள்ள ஒருவலைப் பிடித்து நூறு ரூபா காசை அவனிடம் கொடுத்து அண்ணனைக் கவனமாகப் பாக்கும்படி கூறிவிட்டு வீடு தேடும் படலத்துக்கு இறங்கினான். பல படிகள் ஏறி இறங்கினான். காலம்புறத் தொடக்கம் மத்தியானம் வரை கால் வலிக்க வலிக்கச் சைக்கிள் உழக்கினான். அவனுடைய பாரிய சுமையில் பங்கு கொள்வதற்குப் பலரும் தயங்கினார்கள். அகதிமுகாம்களை எட்டிப் பார்த்தான். அங்கும் இடமில்லை. அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. அவன் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தான்.

''வேண்டாம்...அண்ணர் செத்தா ரெண்டா செத்த வீடு, கிறுத்தியங்கள் எண்டு ஒண்டும் தேவையில்லை. அண்ணைக்காக அழுகிறதுக்கு என்னைத்தவிர ஆர் இருக்கினை? ஒரு சவப் பெட்டியையும் எடுத்து ஆசுப்பத்திரியாலை நேரை சுடலைக்குக் கொண்டேச் சுட்டுப் போட்டு வீட்டை வரவேண்டியதுதான். பிறகு நாங்க மரத்துக்குக் கீழை இருந்தாலும் பறவாயில்லை......''

— இப்படியாக அவன் தன்னுடைய மனதுக்குள் ஒரு தீர்மானத்தை எடுத்துக்கொண்டான்.

வீட்டை நோக்கி அவன் சைக்கிளை உழக்கிக் கொண்டிருந்தான். தாங்க முடியாத பசி. வெய்யில் வேறு உச்சியைப் பிளந்து கொண்டிருந்தது. வீட்டுக்குக் கிட்ட வந்ததும் வீட்டுப் பக்கமாக ஒப்பாரி அழுகுரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அவனுக்கு நெஞ்சு துணுக்குற்றது. ஒருவேளை அண்ணர் ஆசுப்பத்திரியில் இறந்து அந்தச் செய்தி இங்கு வீட்டுக்குக் கிடைத்து......

வாசலில் ஒரு கும்பல் நின்று பலதும் பத்தும் கதைத்துக் கொண்டிருந்தது.

''ரீச்சர் பிள்ளை கலியாணம் முற்றா வாறநேரம். கொழும்பிலை இருந்து கொடியேற்றத்துக்கெண்டே வர இருந்த பிள்ளை, கிளாலிக் கடல்லை நேவிக்காறன்ரை பீரங்கி அடியிலை......''

சண்முகத்துக்கு செவிப்பறையில் வந்து ஓங்கி அடித்த மாதிரி... விழாமல் இருப்பதற்காகக் கேற்றைப் பிடித்துக் கொண்டான் சண்முகம்.

''செத்தவையுக்கை இந்த வீட்டுக் காறப் பிள்ளையுமாம்... பொடியோ ...? அது தண்ணியுக்கை கிடந்து உக்கிச் சிதம்பியிருக்கும் கடற்கரையிலை அடக்கம் செய்ததாம்......''

சண்முகத்தால் பொறுக்க முடியவில்லை. ''கடவுளே... ஆ இதென்ன அநியாயம்...''

தன்னையறியாமல் சண்முகம் கூவிவிட்டான். அவன் சனத்தை விலத்தி உள்ளே சென்று பார்த்த போது —

பூமணி, பாக்கியத்தின் மடியில் விழுந்து அழுது புலம்பிக்கொண்டிருந்தாள்... பாக்கியம் அவளின் கண்ணீரை ஆதரவுடன் துடைத்துக் கொண்டிருந்தாள்.

சண்முகத்தைக் கண்ட பூமணி பிலத்துக் குழறி அழத் தொடங்கிவிட்டாள்.

''குழறக் குழற எத்தினை எத்தினை சீவனுகள்.... இதுகளெல்லாம் துடிக்கத் துடிக்கச் சாகிறதுக்கு காரணமா இருந்தவங்களை......''

இதுவரை காலமாக பூமணியில் வைத்திருந்த ஆத்திரமும் ஆவேசமும் சண்முகத்துக்கு வேறு புறம் திரும்பியது. □□

□□□

# தண்ணொளி பரவிட

அழ. பகீரதன்

நெஞ்சதிர வெடிப்பொலி
துஞ்சி வீழும்
உயிர் சுமந்த நம் உடலம்
அஞ்சி நிதம் மடிவதுவே
வாழ்வானோம்
தஞ்சம் தேடி
தப்பியோட முயல்வு
எமதிருப்பு இங்ஙனம்...
குண்டு மழைப் பொழிவினிடை
சிதறி வீழும் 'செல்'லினிடை
சிதற விடா மனஒருமையில்,
முன்னேறும் எதிரிகளை
மூர்க்கமாகத் தாக்கிநிற்கும்
இளங்குருத்துக்கள்
நம் பிள்ளைகள்...
தொடர்ந்துவரும் நம்துயரித்
தொடரழிக்கப் புறப்பட்டார்
இடர் பல பட்டேனும்
மண்மீட்க உறுதியானார்
அடலேறாய் களத்தினிலே
தமதுயிரை ஈந்தார்
உடல்ஊனம் படினும்
உறுதியிலே குறைவுபடார்
எங்ஙனம் பெற்றனர்
இத்தகு பெருவீரம்?
நமக்கிலா நெஞ்சுறுதி
நம்பிள்ளைகள் பெற்றனரே!
விடிவினிற்காய் விளைந்த
தளிர்களின் வீரத்தால்
தண்ணொளி பரவிடவே
துணைநிற்போம் நாமே. □□




# புகலிட இலக்கியத்தின் முகம்

கருணாகரன்

இன்றைய தமிழ் இலக்கியத்தில் ''புகலிட இலக்கியம்'' என்ற ஒரு அம்சமும் சேர்ந்து கொண்டுள்ளது. நவீன தமிழ் இலக்கியத்தின் புதிய வடிவங்கள் வெவ்வேறான தரிசனங்களைத் தந்த வேளைகளிலெல்லாம் அதனதன் பாய்ச்சலுக்கேற்பவும், எதிர்த்தும் காலக்குரல்கள் எதிரொலித்தன. இப்பொழுது புதியதொரு அநுபவமாக, வித்தியாசமான பாய்ச்சலாக இன்னொரு தரிசனமாக 'புகலிட இலக்கியம்' நமக்குப் பரிச்சயமாகி வருகின்றது. இந்தப் புகலிட இலக்கியம் என்பதன் பரிமாணங்கள் பற்றி இப்பொழுது அதிகமாகவும், தீவிரமாகவும் பேசப்படுகின்றதையும் அவதானிக்க முடியும்.

ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து அந்நிய நாடுகளில் புகலிடம் தேடியோரின் படைப்பாக்க, கலையாக்க முயற்சிகளே 'புகலிட கலை, இலக்கியம்' என்ற முகத்தைக் கொண்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, பிரித்தானியா, நோர்வே மற்றும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிடையே அநேகமான புகலிட இலக்கியத்தின் மேற்கிளம் புகை தெரிகின்றது. ஈழத்திலிருந்து உலகின் பல திசைகளிலும் தமிழர் வாழ்வு பரவியோ, சிதறியோ இருப்பினும் மேற்சொன்ன நாடுகளிலேயே இலக்கியம் மற்றும் கலை ஆக்க முயற்சிகளின் தீவிரத்தை அவதானிக்க முடிகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் ஈழத்தமிழர் இருப்பினும் அந்தந்த நாடுகளின் நடைமுறை விதிகள் காரணமாக மௌனக் குரலில் சில கீதங்கள் இசைக்கப்படலாம். ஆனால் அவற்றைக் கவனிக்க முடிவதில்லை.

புகலிட இலக்கியங்களில் எமது பார்வைக்குக் கிட்டுவன அங்கிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஒலி-ஒளி நாடாக்கள் மற்றும் நூல்கள் என்பனவே. அரங்கக் கலையை நாம் தரிசிக்க முடியாத போதும், அங்கு நிலவும் அரங்கு பற்றிய மதிப்பீடுகளையும், விமர்சனங்களையும் அங்கிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகளினூடாக அறிய முடிகின்றது. இவை தவிர, கலை, இலக்கியப் பிரக்ஞைமிக்க நண்பர்களின் மூலமாகவும், அங்கு நிலவும் கலை, இலக்கிய முயற்சிகள், தன்மைகள் என்பனவற்றையும் அறிய முடிகின்றது. இவற்றைக் கொண்டு புகலிட இலக்கியத்தின் இன்றைய முகத்தைக் காணலாம்.

ஒரு தொடர்ந்த அவதானிப்பில் புகலிட இலக்கியத்தின் சில தன்மைகளைத் தெளிவாக கவனங்கொள்ள முடிகிறது. அவை பிரதானமாக இரண்டு வகைப்படுகின்றன. முதலாவது வகை, தாம் எங்கிருந்தாலும் தாய் மண்ணின் விடிவு, தமது இனத்தின் விடுதலை, என்பவற்றுக்காகச்

சிந்திப்பது, குரல் கொடுப்பது, போராடுவது என்ற அடிப்படையைக் கொண்டது. இரண்டாவது வகை, தாம் விரும்பிய ஒரு நிலை இங்கு இல்லை என்பதும், இந்தப் போராட்டத்துடன் இணைய முடியாததற்கான தம் காரணங்களை நியாயப்படுத்தி தம்மைத் தூய்மையாளராகக் காட்டும் தன்மையதுமாகும்.

முதலாவது வகையினரின் தன்மைகளை நோக்கும் பொழுது அவர்கள் இங்கிருந்து போராட்டத்துடன் நேரடியாகப் பங்காற்ற முடியாது போனாலும், எமது தாயக விடிவிற்கான தமது பங்கை இயன்றவரை அக்கறை பூர்வமாகச் செய்கின்றனர். இந்த மண்ணின் கொதிநிலை உணர்வுகளை, வீரமிக்க களநிகழ்வுகளை, எங்கள் மக்களின் துயரங்களை, வேதனைகளை அவர்கள் அங்கு எதிரொலிக்கின்றார்கள். எமக்கான குரலை அங்கு அவர்கள் பிரதிபலிக்கின்றனர். எங்களது விடுதலைப் போராட்டத்தின் அவசியத்தை, நியாயத்தை, எமது மக்களின் அபிலாசைகளை அவர்கள் உலகெங்கும் விளக்குவதற்காகச் செயற்படுகின்றனர். போராட்டத்துக்காக அங்கு செயற்படும் விடுதலைப் புலிகளின் கிளை அமைப்புக்களுடன் இணைந்து கருமமாற்றுகின்றனர். அவர்களின் இந்தக் கூட்டுழைப்பின் வெளிப்பாடாக 'எரிமலை' 'களத்தில்', 'உலகத்தமிழர் குரல்', 'சுதந்திர தாகம்' எனப்பல பத்திரிகை, சஞ்சிகைகள் வெளிவருகின்றன.

இவை விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தேடும் நோக்குடன், கள நிகழ்வுகளின் யதார்த்தத்தையும் பிரதிபலிக்கின்றன. தாயக ஏக்கம், அகதி வாழ் நிலையின் துயரம், விடுதலைக்கான ஆவேசம் வெளிநாடுகளில் இயலாத்தன்மையுடன் வாழும் ஆற்றாமை, நிறவெறி, உழைப்புச் சுரண்டல், மொழிப்பிரச்சினை, கலாச்சார மாற்றம் என்ற உணர்வு வெளிப்பாட்டுடன், இன்னும் களத்தின்குரலாக இங்கிருந்து (ஈழத்திலிருந்து) வெளியாகும் படைப்புகளையும் மறுபிரசுரம் செய்கின்றன. பிரதானமாக கள நிகழ்வுகள் பற்றி அவை கொண்டுள்ள நிலைப்பாடு களத்திலிருந்து வெளிவரும் படைப்புகளை வெளியிடுவதன் மூலமாகவே யதார்த்தத்தை வெளிக்கொணர முடியும் என்பதாகும். இதுதான் மிகச் சரியானதுமாகும். ஏனெனில் அங்கிருந்து கொண்டு கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் இந்த மண்ணைப் பற்றிய படைப்புருவாக்கம் செய்யும் பொழுது அது உயிரற்றதும், பொய்மைத்தனம் நிறைந்ததுமாகக் காணப்படும். அவ்வாறானவை இரண்டாவது வகையைச் சார்ந்தோராலேயே இன்று ஆக்கம் செய்யப்படுகின்றன.

இரண்டாவது வகையினர் அங்கு தங்கள் வாழ்வைத் தொடர்ந்தும் ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கென தமக்குச் சார்பான கருத்துக்களை உருவாக்க முயல்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் தாய் மண்ணின் நிகழ்வுகளாக இந்தப் போராட்டத்துடன் ஒட்டாத அந்நியத்தனமான கருத்துருவங்களை வெளிப்படுத்துகின்றனர். இவர்களது கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்பன வெறுமனே அரசியல் பிறழ்ச்சி உடையனவாகவே காணப்படுகின்றன. ஒரு தொடர்நிலையில் தமது வாழ்வின் வசதிகள், தமது எதிர்காலக் கற்பனைகளின் கட்டுமாணங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்காக இவ்வகைச் செயற்பாட்டில்; கருத்துலகில் உள்ளனர்.

தமது குறுகிய லாப அடிப்படையில் எந்தவிதமான ஆதாரமும், நியாய பூர்வமுமற்று, தாயக மண்ணின் மீது தாம்மிக அதிகமாகப் பற்றுணர்வு கொண்டுள்ளோம் என்று உணர்த்த முயல்கின்றனர்.

இந்த மாயை அவர்களின் படைப்புக்கும், இங்கு நிகழ்ந்தேறும் சம்பவங்களுக்கும் இடையில் பெருத்த இடைவெளியாக இருப்பதன்மூலம் தெளிவாகின்றது. புலம்பெயர்ந்தோர் இலக்கியம், புகலிட இலக்கியம் என்று சொல்லிக் கொண்டும், தீவிரமாக இந்த அம்சம் பற்றி விவாதித்துக் கொண்டும், அவர்கள் போலி உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கின்றனர். இதற்கென இவர்களால் சிற்றிலக்கிய ஏடுகள், பத்திரிகைகள் என்பனவும் நூல்கள் மற்றும் அரங்க முயற்சிகள் என்பனவும் குழு நிலையில் இயக்கம் காணுகின்றன. ஈழத்திலிருந்து உலகின் பல திசைகளிலும் அகதிக் குரல்களும், பொருளாதாரப் பிழைப்புக்கென அரசியல் வியாபார எதிரொலிகளும் நிறைந்து போனதன் விளைவா இது? அல்லது ஈழத்திலிருந்து வெளியேறி ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் புதிதாகக் குடியேறிய பின் இந்த மண்ணில் தாம் வாழ்ந்த நினைவுகளின் அலைக்கழிப்பால் எழும் மன உளைவிலிருந்து பிறப்பெடுக்கின்றதா? அல்லது போராட்டத்தில் பங்கேற்க முடியாமல் போய்விட்ட குற்றவுணர்வை மறைப்பதற்கான பிரயத்தனங்களா? எவ்விதமாயினும் இந்தப் போக்கு தம் சுய உணர்வுக்கே விரோதமானவர்களால் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதைத் துணிந்து கூறலாம்.

'புகலிட இலக்கியம்' என்பது தாய் மண்ணைவிட்டு வந்தோம் என்பதாகவோ தாய் மண்ணுக்காக அனுதாபப்படுவதாகவோ அல்லது பிறந்த மண்ணுக்கான மேலாதிக்க ஆலோசனைகள் கூறுவதாகவோ இருக்காது. இந்த மண்ணிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள், இன்னொரு நாட்டில் வாழும்போது அந்த அநுபவங்களினூடாகக் காணப்படும் தரிசனமாகவே படைப்புக்கள் அமைய வேண்டும். சீதோஸ்ண நிலையிலிருந்து, மொழி, நிறம், வாழ்வியல் முறை, பண்பாடு என அனைத்திலும் வித்தியாசமான நிலையில், வேறுபாடுகளுடன் வாழும் போது ஏற்படும் அநுபவம் என்ன? அங்கு அப்போது கிளம்பும் உணர் நிலை என்ன? இரண்டாம் தரப் பிரஜைகளாக, அந்த வாழ்வுடன் ஒட்டமுடியாமல் தவிக்கும் தவிப்பு எப்படியானது? இவை பற்றி, எத்தனை படைப்புக்கள் உருவாக்கம் பெற்றுள்ளன? வாழ்வதற்கான நிலமோ, உரிமைகளோ இல்லாது அங்குள்ளவருக்குக் கீழ் தொழில் புரியும்போது இவர்களின் மன நிலை, அவலம் எப்படிப் பிரதிபலிக்கின்றது என எதையும் அநேகமாக அங்கிருந்து வெளியாகும் படைப்புக்களில் காணமுடிவதில்லை. ஒட்டுமொத்தமாக புகலிடத்தின் அநுபவம் என்ன என்பதைப் புகலிட இலக்கியங்கள் தரவேண்டும். அப்பொழுது தான் அவை 'புகலிட இலக்கியம்' என்ற பொருளைக் கொண்டிருக்கும். மற்றவை எதுவும் புகலிட இலக்கியம் என்பதைவிட புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்ற பொருளில்தான் அமையும். எனவே இங்கு முத்தமிழ் விழா மலர் (1991ல்) செ. யோகராசா அவர்கள் 'புகலிட இலக்கியம்' தொடர்பாக குறிப்பிட்ட கருத்தை நினைவு கூர்வது பொருத்தமாகும்.

''அண்மைக்காலம் வரையிலான புகலிட இலக்கியங்கள் பெரும்பாலும் தாய் மண்ணைத் தழுவியதாகவே—ஈழத்தைச் சார்ந்ததாகவே — காணப்படுகின்றன. இது மட்டுமே புகலிட இலக்கியத்தின் பண்பாகாது அங்குள்ள வாழ்நிலைப் பிரச்சனைகளைக் கூர்மையுடன் சித்திரிப்பதாகவும் அவை அமைவது அவசியம். அப்போதுதான் 'புகலிட இலக்கியம்' என்பது அர்த்தமுடையதாகும், முழுமை எய்தும். அந்நிலை இனிமேற்றான் ஏற்பட வேண்டும்; விரைவில் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு காணப்படவே செய்கின்றது''

இவ்வாறு கூறப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. எனினும் எதிர்பார்த்த பண்பு மேலோங்கியதாகத் தெரியவில்லை. இனிமேலும் தொடருமென்பது ஒரு கேள்வி நிலையே. போலி உணர்வுகளை தவிர்த்து உண்மையை தரிசிக்கும் போதுதான் மெய்ப்படைப்புகள் வெளிவரும். □□



# தொடர்கதை

வல்வை ந. அனந்தராஜ்

தூக்கம் வராது, பாயில் புரண்டு கொண்டிருந்த மோகன் மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன...!

"சேக்!... கெதியாய் விடியாதாம்... விடிஞ்சவுடனை குளிச்சு... சிவன் கோயிலுக்குப்போய்......" அவன் கற்பனைகள் அகன்று விரிந்து கொண்டிருந்தன. பாயில் படுத்திருந்தபடியே, தலையைச் சிறிது உயர்த்தி அந்தக் கூடத்தைப் பார்க்கின்றான். சாளரத்தினூடாக வந்த நிலவொளியில், அந்தக் கூடத்தினுள் ஒரு மூலையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த அவனுடைய தாயும், மூத்த சகோதரியும், தங்கையும் அவன் கண்களை நிரப்பிக் கொண்டிருந்தனர்.

"எங்கடை சமுதாயத்திலை பணம் இல்லாட்டி உயிரோடை வாழுறதிலை அர்த்தமில்லை. பாவம்... முப்பது வயதாப் போயும், அம்மாவாலையோ, என்னாலையோ, என்ரை அக்காவுக்கு ஒரு கலியாணத்தைச் செய்து பார்க்க முடியவில்லை. காசு உள்ளவங்கள் நாலு லட்சம், ஐந்து லட்சம் என்று ரொக்கத்தைக் கொடுத்து மாப்பிளையளை எடுத்துப் போடுவாங்கள்... ம்... எங்களைப் போல ஆக்களாலை..."

அவனுடைய உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்த பெருமூச்சு அனலாகப் பரவிக்கொண்டிருந்தது.

விடிந்தால் அவனுக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசிலுக்கான நேர்முகப் பரீட்சை. அதுவும் யாழ்ப்பாணத்தில் கச்சேரியிலேயே நடைபெறும். இதில் அவன் தேர்ந்தெடுக்கப்பட்டால் இரண்டு வருட மேற்படிப்புடன் வெளிநாட்டுச் சம்பளம்.. அதற்குப் பிறகு அவனுடைய குடும்பக் கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி .. மோகனின் மனம் அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தது.

கற்பனையில் மிதந்து கொண்டிருந்த மோகன் மாறி மாறிப் புரண்டு கொண்டிருந்தான். நித்திரை மட்டும் அவனை நெருங்க மறுத்தது.

மனதில் பெருஞ் சுமை அழுத்திக் கொண்டிருக்கும் பொழுது, உறக்கம் எப்படித்தான் வரும்? அவனுடைய வாழ்க்கைப் போராட்டம் அவனுடன் மட்டுமா? அவனைச் சுற்றி ஒரு சிறு உலகமே அல்லவா இருக்கிறது? அந்தச் சின்னஞ் சிறிய உலகத்தின் தேவைகள் - அபிலாசைகள் அவனை அழுத்தும் பொழுது...?

மெல்ல மெல்ல அவன் கண்கள் அயர்ந்து கொண்டு வந்தது... அவனை அறியாமலேயே அவனுடைய கண்கள் மூடிக்கொண்டன.

''தம்பி!... ஆறு மணியாச்சுது... எழும்பி ஆயத்தப்படுத்து... அம்மாவும் சாப்பாடு ஆயத்தப்படுத்தி விட்டா......''

இறுதி நேரத் தூக்கத்தின் இன்பநுகர்வில் இருந்த மோகனுக்கு, அவள் தட்டி எழுப்பியதும் எதனையோ இழந்துவிட்டது போன்ற பிரமை!...

தெருவில் மூலைக்கு ஒன்றாக நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன... வேண்டாத விருந்தாளிகள் தமிழீழத் தெருக்களின் வீதிகளில் வருவதாலோ என்னவோ, நாய்களுக்குக்கூட ஒரு வெறுப்பு!...

''வெள்...! வெள்!... நாய்கள் தொடர்ந்தும் குரைத்துக் கொண்டே இருந்தன.

''ஆமிக்காரங்கள் நிக்கிறாங்கள் போல கிடக்கு... அதுதான் நாய்கள் இப்பிடி...''

படுக்கையில் இருந்து எழுந்த மோகன், உடலை நெட்டி முறித்துக் கொண்டான். இரவு, நீண்ட நேரம் நித்திரையில்லாது இருந்ததாலோ என்னவோ அவனுடைய கண்கள் சிவந்து போய் இருந்தன.

உமிக்கரியை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்ற மோகனின் நினைவுகள், இன்று நடைபெறப் போகும் நேர்முகப் பரீட்சை பற்றிய சிந்தனையில், அசை போட்டுக் கொண்டிருந்தன.

''தம்பி!. தம்பி!....'' தமக்கையின் குரல் கேட்டு விறுவிறென்று குளித்து முடித்துவிட்டு துவாயினால் துடைத்தபடி வந்தான்.

''தம்பி!... இண்டைக்கு ஏதோ 'கேர்பியு' எண்டு கதைக்குதுகள் தெருவெல்லாம் ஆமி நிக்கிறாங்கள்...... சந்தியிலே கன பேரைப் பிடிச்சு வைச்சிருக்கிறாங்களாம். கொழும்பு பஸ்ஸுக்குப் போக வந்த சனங்களையும் பிடிச்சு வைச்சிருக்கிறாங்களாம். இங்கை தானாம் கேர்பியு'...''

படபடவென்று வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருந்த தமக்கை கமலத்தின் உடல் ஒரு நிலை கொள்ளாது தவித்துக் கொண்டிருந்தது.

''தம்பி! ...... எப்பிடியடா இண்டைக்கு யாழ்ப்பாணம் போகப் போறாய். அந்த வெள்ளைக்காரங்கள் கொழும்பில இருந்து 'இன்ரவியு'க் கென்றே வந்திருக்கிறாங்கள்...''

கமலத்தின் வார்த்தைகளைக் கேட்டதும், மோகனுக்கு நொந்துபோன இதயத்தில் முள் தைத்தது போல இருந்தது!

அந்த ஒரு கணத்தில் அவனுடைய எண்ணங்கள், கற்பனைகள் தடதடவென்று ஆட்டம் கண்டது.

''இந்த அறுந்து போவாங்களாலை பெரிய கரைச்சலாக் கிடக்கு...... நினைச்சு, நினைச்சு ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு இடத்திலை ஊரடங்குச் சட்டம்... சேச்!...

அமைதிப்படை என்டு சொல்லிக் கொண்டுவந்து இந்த இந்தியாக்காரன் செய்யிற அநியாயத்தை ஆர் கேக்கினம்...?''

அவனது எதிர்பார்ப்புகள், கற்பனைகள் எல்லாம், அந்தஒரு வினாடியில் துகள், துகளாகிக் கொண்டிருந்தன...

''அக்கா!... எப்பிடியெண்டாலும், நான் போய்ப் பார்ப்பன்...... இண்டைக்கு இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால், பிறகு எனக்கு இது கிடைக்காது... 'இன்ரவியு'வுக்குப் போனால் எனக்குத்தான் கட்டாயம் கிடைக்கும்...''

அவன் இயந்திரம் போல்,சொல்லிக்கொண்டே புறப்படுவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

''தம்பி! ..... ஏதோ கடவுள்தான் உதவி செய்ய வேண்டும்.. சரி, கோப்பையிலை சாப்பாடு போட்டிருக்கு, வந்து சாப்பிடு...''

கோப்பையில், சாப்பாட்டைப் போட்டுக் கொண்டே மோகனைச் சாப்பிடவைத்தாள்.

அவசர அவசரமாகச் சாப்பாட்டை விழுங்கி முடித்துவிட்டு எழுந்த மோகன், தனது ஆவணங்கள் அடங்கிய கோவைகளையும் தூக்கியபடி, தாயிடமும், சகோதரிகளிடமும் விடைபெற்றுக் கொண்டு வாசல் கதவைத் திறந்து வெளியேறினான்

வீட்டில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரம் சென்றிருப்பான். வழியில் இராணுவத்தினரின் ஆரவாரத்தையே காணவில்லை. அவன் சென்ற பாதை வழியே எவரையும் காணாதது அவனுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

''ம்..... இப்படியே ஒழுங்கையளுக்குள்ளாலை நடந்துபோய் வல்லைக்குப் போய்விட்டன் என்றால் பிறகு அங்காலை யாழ்ப்பாணம் போய்விடலாம்...''

'இன்ரவியு' நினைவு வந்ததும், அவனுடைய உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த ஆவல், பீறிட்டுப் பாய்ந்தது! தனது நடையில் வேகத்தைக் கூட்டி விரைந்து நடக்கத் தொடங்கினான்.

''ஸ்டாப்!......''

கர்ண கடூரமாக ஒலித்துக் கொண்டிருந்த அந்தக் குரலைக் கேட்டுத் திகைத்துப் போன மோகனுக்கு ஐந்து அறிவும் அடங்கிக் கொண்டு வருவதுபோல் இருந்தது.

மதகினுள் ஒளித்திருந்த இராணுவச் சிப்பாய்கள் அவனை நோக்கித் துப்பாக்கிகளுடன் வந்தனர். ஒரு சிப்பாய் கசுமுசு..... என்று ஏதோ விளங்காத மொழியில் சத்தமிட்டபடி வந்தான்.

அப்பொழுது, தான் வசமாக மாட்டிக்கொண்டு விட்டதை உணர்ந்த மோகன், மிரளத் தொடங்கினான். அவனுடைய கையில் இருந்த கோவையை ஒருவன் பறித்தெடுத்தான்.

''யூ... எல் ரீ ரீ ஈ...''

துப்பாக்கியை நெஞ்சில் வைத்தபடி ஒரு சிப்பாய் ஆவேசமாக நெருங்கினான்.

''வெயர் கோ?......... ருடே கர்பியு.....''

ஆங்கிலம் செத்துக் கொண்டிருப்பதை நினைத்ததும் மோகனுக்கு பயம், வேதனையின் மத்தியிலும் உள்ளூரச் சிரிப்பும் வந்தது.

''சேர்!...... ஐ கோ இன்ரவியு......''

நடுங்கும் குரலில் அவனுடைய பாணியிலேயே மோகன் முனகிக் கொண்டிருந்தான்.மோகன்

பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, அவர்களில் ஒருவன் வந்து, வெள்ளைக் கயிற்றினால், மோகனின் இரு கைகளையும் பின்புற மாகக் கட்டிவிட்டான். அவனைப் போன்று, அங்கே பலர் கூட்டி வரப்பட்டனர்.

எல்லோருமே, கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் ஒருவர் பின் ஒருவராகக் கூட்டிச் செல்லப் பட்டனர். அப்படியே உடுப் பிட்டி வீதி வழியாக வந்து சிவன்கோவில் முன் வீதியில் எல்லோரையும் நிற்கவைத்தார்கள். மோக னைக் கொண்டு போய் விட்ட ஒரு மணித்தியாலத் திற்குள் நூற்றுக்கணக்கான இளைஞர்களையும், வய தானவர்களையும் கூடக் கட்டி இழுத்துக் கொண்டு வந்து வெயிலில் விட்டார் கள்!

நேரம் போய்க் கொண்டே இருந்தது! உச்சி வெயில் அவனுடைய உடலைச் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

''ஐயோ!... கடவுளே! .. பத்து மணியாச்சுது. இன்ரவியு இவ்வளவு நேர மும் தொடங்கி இருக்கும்... இப்பிடி எங்கடை பக்கத் திலை திடீரென்று ஊரடங் குச் சட்டம் போடுவாங்கள் எண்டு, அவங்களுக்குத் தெரியப்போகுதோ?''

அவனால் அதற்கு மேலும் பொறுமையுடன் இருக்க முடியவில்லை......

''சேர்!... இன்றைக்கு இன்ரவியுக்கு யாழ்ப்பாணம் போகவேணும்... என்னை விடமாட்டியளே......''

அவனுடைய மனதுக் குள் இருந்த ஆதங்கம் வார்த்தைகளாகி ஒவ் வொன்றாக வெளிவந்து கொண்டிருந்தன.

கோயில் கோபுரத்தின் கீழ் நின்ற சிப்பாயிடம் சென்று பவ்வியமாகக் கேட் டுக்கொண்டு நின்றான்.

''யூ... பிளடி ராஸ்கல்! .. வட் இன்ரவியு...?''

ஏதோ கேட்கக் கூடா ததைக் கேட்டதுபோல் சத்தமிட்டபடியே மோகன் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கிவிட்டான்.

அந்தச் சிப்பாய் அவ னைத் தாக்குவதைக் கண்டதும் தூரத்தில் நின்ற மற்றைய சிப்பாய்களும் இந்தியில் ஏதோ கத்திக் கொண்டு அவனருகில் வந்ததும்,

''யூ... எல்.ரீ.ரீ.ஈ...'' என்று சத்தமிட்டபடி தாக் கத் தொடங்கி விட்டார் கள்!

மோகனுக்கும் தான் ஏன் தாக்கப்படுகின்றேன் என்று தெரியவில்லை!

அந்தச் சிப்பாய்களுக்கு ஏன் தாக்குகின்றோம் என்றும் தெரிந்திருக்காது.

அங்கே ஒரு வினாடி மயான அமைதியில் அந்தப் பிரதேசமே சூனியமாகிக் கொண்டு வந்தது.

அந்தச் சிப்பாய்களின் மிருகத்தனமான அடி வேதனையில் கண்கள் இருண்டு கொண்டுவர அப் படியே மயங்கி விழுந்து விட்டான்... அவனோடு தடுத்து வைக்கப்பட்டிருந்த வர்கள் திகைத்துப்போய் நின்றார்கள்!

''இன்ரவியு... இன்ர வியு... வேலை... அக்கா கலியாணம்......''

அந்த மயக்க நிலை யிலும் அவனுடைய உதடு கள் அவனை அறியாம லேயே புலம்பிக் கொண் டிருந்தன!

அவனுடைய கோவை யில் இருந்த ஆவணங்கள் சோழகக் காற்றில் அங் கொன்றும் இங்கொன்று மாகப் பறந்துகொண்டிருந் தன.

அவனுடைய சுதந்திர நினைவுகள், இலட்சியங் கள் இன்று மட்டுமல்ல...... இவர்கள் போக, இன்னு மொரு ஆக்கிரமிப்பாளன் இந்த மண்ணை ஆக்கிர மிக்கும் போதும் அவை கனவுகளாகவே போகும்...! நிர்மூலமாகும்......!

அப்பொழுதும் புதிய சந்ததியின் கனவுகள் தொடரும்...? இந்த மண் ணின் கதையும் தொட ரும்... □□

# தீதான் எமதுணவு

வவுனியா திலீபன்



முட்கள் சுகம் தரும்!
இடி இதமாக
எம்மைத் தழுவும்!
தீ இனிக்கும்!

ஆச்சரியம் தான்...
பூக்களுக்கெல்லாம்
புயல் மீது பிரியம்!

நாம்-
சுதந்திரத்தை
நேசிக்கிறோம்!

சுதந்திர விதை
முளைவிடுவதற்கு
ரத்த நீர் பாய்ச்சுகிறோம்!

காற்று மிக மிருதுவாய்
காது மடல்களைத் தட்டும்
தனிமைப் பொழுதில்
இந்த மண்ணில் வீழ்ந்தவர்கள்
நினைவுகள்
மனசுள்
மையங்கொள்ளும்!

பனி நீர்
சுடு நீராகும்.
தென்றல் காயப்படுத்தும்
சருகுகள்
கற்களாகி
கால்களைக் கிழிக்கும்!

மறுகணம்
வீழ்ந்தவர் ஞாபகங்கள்
எம்மை
புயலாகப் புதுப்பிக்கும்!

எமது விழிகளில்
நெருப்பு
இருப்புக் கொள்ளும்.

எமது செவிகளில்
முரசு
சரசமாடும்.

இத்தனை
இழப்புகளின் பின்னரும்
நாம் யோசிக்கவில்லை
எதிரியை யாசிக்க வைத்திருக்கிறோம்.

தேசம் மீளும் வரை
தீ தான்
எமதுணவு.

□□

# லில்லி மலர்கள்

றூ சி யூவான்



தமிழில்:-
சாவித்திரி அத்துவிதானந்தன்

1946-ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தின் நடுப்பகுதி அது.

குவோமின்ராங் *(Kuomintang)* படைகளுக்கெதிராகப் பெரிய தாக்குதல் ஒன்று திட்டமிடப்பட்டது. தாக்குதல் சமயத்தில் ஏற்படக்கூடிய தேவைகளைக் கவனிப்பதற்காக-வெவ்வேறு ஆட்கள் வெவ்வேறு பிரிவுகளுக்கு அதிகாரிகளினால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

போர் முனைக்கு அருகிலுள்ள முதலுதவி நிலையத்தில் பணிபுரிவதற்காக நான் இறுதியில் அனுப்பப்பட்டேன். நான் போகவேண்டிய இடத்துக்கு என்னைக் கூட்டிச்செல்லும் வழிகாட்டியாக வந்திருந்த தொடர்பாளனைப் பின்தொடர்ந்து, எனது மூட்டை முடிச்சுகளுடன் நடக்க ஆரம்பிக்கிறேன்.

காலையில் பெய்த மழை இப்போ ஓய்ந்திருந்தது. மழைநீரின் பிசுபிசுப்பில் வீதி வழுக்கிக் கொண்டிருந்தது. வீதியோரத்துச் செடிகள் மழைநீரில் தூசி அகன்று வெயிலில் பச்சையாய்ப் பளபளத்துக் கொண்டிருந்தன. சுத்தமான காற்று இதமாய் வீசிக்கொண்டிருந்தது.

ரம்மியமான அந்தச் சூழ்நிலையை, இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருந்த எதிரியின் 'ஆட்லறி' வெடிச்சத்தங்கள் பாழ் செய்து கொண்டிருந்தன. இல்லையென்றால் - ஒரு விழாவுக்குப் போவது போன்ற மன உணர்வையே அந்தச் சூழ்நிலை ஏற்படுத்தியிருக்கும்.

பத்துப் பன்னிரண்டு யார் இடைவெளியில் அவன் எனக்கு முன்னால் நடந்துகொண்டிருந்தான்.

கால்கள் கொப்பளித்திருந்ததாலும், வீதி வழுக்கிக்கொண்டிருந்ததாலும் அவனுக்கு ஈடாக நடக்க என்னால் முடியவில்லை.

நான் நடையை வேகப்படுத்தினால், அவனும் வேகமாய் நடந்தான். எனது நடையின் வேகம் தணிந்த போது அவனும் மெதுவாக நடந்தான்.

இத்தனைக்கும் ஒரு தடவை கூட அவன் பின்னால் திரும்பிப்பார்க்க வில்லை. ஒருவேளை அவனுக்குப் பிடரியிலும் கண்கள் இருந்தனவோ?

.........

எப்படியிருந்தபோதும் எனக்கும் அவனுக்குமிடையில் இருந்த தூரம் குறையவுமில்லை- கூ ட வு மில் லை. அவனைப்பற்றி அறியும் ஆவல் எனக்குள் உருவாகியது. தலைமை யகத்திலும் அவனை நான் சரியாகப் பார்க்கவில்லை. முன்னால் சென்று கொண்டிருந்த அவனை இப்போது பார்க்கிறேன்.

அகன்ற தோள்களுடன் உயர மான சிறுவன். அவன் மங்கிப்போன மஞ்சள் நிறச் சீருடை அணிந்திருந் தான். மரத்தின் சிறுகிளையொன்று அவனுடைய துப் பா க் கிக் குழ லைச் சுற்றியிருந்தது, உருமறைப் புக்காக என்பதையும் விட, அழகுக் காகச் செய்யப்பட்டது போலவே தோன்றியது.

நடந்ததில் எனது கால்கள் வீங்கி விட்டன. அவனை அழைத்து, ''சிறிது நேரம் இளைப்பாறிவிட்டு நடப் போமே'' எனக் கூறிவிட்டு, ஒரு கல் லில் அமர்ந்துகொண்டேன்.

எனக்கு முதுகைக் காட்டியபடி, சிறிது தூரத்தில் இருந்த கல் ஒன்றில் அவனும் அமர்ந்து கொண்டான். தனது முழங்கால்களுக்குக் குறுக் காகத் துப்பாக்கியை வை த் து க் கொண்டு, நான் ஒருத்தி இருப்ப தையே அறவே கவனிக்காதவன்போல அவன் இருந்ததன் காரணம், நான் ஒரு பெண் என்பதாகவே இருக்க வேண்டும் என்பதை உ ண ர் ந் து கொண்டேன்.

திடீரென நான் எழுந்துபோய் அவனெதிரே இருந்த கல் ஒன்றில் அமர்ந்துகொண்டது, அவனைக் கல வரப்படுத்தியிருக்க வேண்டும்... என்ன செய்வதென்று தெரியாமல் அவன் திண்டாடுவது தெரிந்தது.

இளமை மாறாத அந்த வட்ட முகம், அவனுக்குப் பதினெட்டு வய துக்கு மேல் இருக்காது என்பதைச் சொல்லியது.

''நீ எந்த ஊரைச் சேர்ந்தவன்?''

தொண்டையைச் செருமியபடி, ''ரியான்முஷான்'' (*Tianmushan*) என் றான்.

ஓ..... நாங்கள் இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள்தான்...

''வீட்டில் என்ன செய்துகொண் டிருந்தாய்?''

''மூங்கில் இழுப்பதில் அப்பா வுக்கு உதவி செய்துகொண்டிருந் தேன்''

எங்கள் ஊரின் மூங்கில் காட்டின் ஒடுங்கிய பாதையிலே நின்று, செடி களின் நுனிகள் பாறைகளில் மோதிக் கலகலக்கும்படி மூங்கில் இழுத்துக் கொண்டு நிற்கும் ஒரு மனிதன் எனது மனக்கண்ணில் வருகிறார். இவனைப் போலவேதான் அவருக்கும் அகன்ற தோள்கள்... அவர்தான் இவனுடைய தந்தையாக இருக்கவேண்டும்...

''உனக்கு எத்தனை வயசு?''

''பத்தொன்பது''

''எப்போது படையில் சேர்ந் தாய்?''

''கடந்த வருடம்''

''ஏன் படையில் சேர்ந்தாய்?''

— நான் இப்படிக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போவது, சம்பாஷணையாக இல்லாமல் ஒரு குறுக்கு விசாரணை போலவே இருந்ததை உணர்ந்து கொண்டும், நான் அவனை இப்படிக் கேட்டேன்.

''எனது கிராமத்துக் கூடாக இந்தப் படையினர் நடந்தபோது நானும் அவர்களுடன் சேர்ந்து வந்து விட்டேன்''

''உனது குடும்பம் யார் யாரைக் கொண்டது?''

''அம்மா... அப்பா... தம்பி...... சகோதரிமார்... எங்களுடன் வசிக்கும் ஒரு அத்தை.''

''நீ திருமணமானவனா?''

''.................''

அவன் எதுவுமே பேசாமல்' தர்ம சங்கடத்துடன் சிரித்தபடி வேகமாகத் தலையை ஆட்டினான்.

அவனுடைய உள்ளம் கவர்ந்த பெண் யாராவது இருக்கிறாளா என்ற கேள்வி என் நா வரைக்கும் வந்து விட்டபோதிலும் நான் கேட்கவில்லை.

சிறிது நேர மௌனத்தின்பின்,

'புறப்படுவதற்கு நேரமாகிவிட்டது' என்று சொல்வதுபோல அவன் வானத்தையும் பார்த்து, பின் என்னையும் பார்த்தான்.

முதலுதவி நிலையத்தை அடைந்தபோது பகல் இரண்டு மணி. போர்முனையிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில் அந்த இடம் அமைந்திருந்தது.

சிறிதும் பெரிதுமாய் முக்கோண வடிவிலே அமைந்திருந்த ஆறு கட்டிடங்களைக் கொண்ட ஒரு ஆரம்ப பாடசாலை அது. வளவிலே பெருமளவில் வளர்ந்துவிட்டிருந்த பூண்டுகள், சில காலமாகவே அந்தப் பாடசாலை நடைபெறவில்லை என்பதைக் கூறின. பலர் உதவியாளர்களாக அங்கே பணிபுரிந்துகொண்டிருந்தனர். அறைகளின் கழற்றப்பட்ட கதவுகள், ஒழுங்காக அடுக்கப்பட்ட கற்களின் மேல் குறுக்காகப் போடப்பட்டு, நோயாளிகளுக்கான படுக்கைகளாய் மாறியிருந்தன. காயங்களுக்கான மருந்துவகைகள் தயார் நிலையில் இருந்தன. படுக்கைகளுக்கு விரிப்பதற்குப் போதுமான அளவு மெத்தைகள் மட்டும் வந்து சேர்ந்திருக்கவில்லை. காயமடைந்துவரும் நோயாளிகள் குளிரின் பாதிப்புக்கு மிகவும் விரைவாக உள்ளாகிவிடுவார்கள் என்பதால் மேலும் சில மெத்தைகள் அந்தக் கிராமத்து மக்களிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளவேண்டியிருந்தது.

அந்த வேலையைச் செய்ய நான் முன்வந்தேன். உடனடியாகவே செய்ய வேண்டிய பணியாக அது இருந்தபடியால், என்னுடன் வந்து உதவி புரிந்தபின் போர்முனைத் தலைமையகத்துக்குப் போகும்படி எனது வழி

காட்டிச் சிறுவனைக் கேட்டுக்கொண்டேன். முதலில் தயங்கினான். பிறகு சம்மதித்தான்.

அருகில் இருந்த கிராமம் ஒன்றுக்குப் போய், ஒரு சந்தியில் அவன் கிழக்குப் பக்கமாகவும் நான் மேற்குப் பக்கமாகவும் மெத்தைகள் சேகரிப்பதற்காக நடந்தோம். சிறிது நேரத்திலேயே, இரண்டு பெரிய மெத்தைகளும் ஒரு சிறிய மெத்தையும் என்னிடம் சேர்ந்துவிட்டன. அவற்றைக் கொண்டுபோய் வைத்துவிட்டு மீண்டும் வர எண்ணியபோது என்னெதிரே அவன் வெறுங்கையுடன் வந்து கொண்டிருந்தான்.

''என்ன நடந்தது?''-நான் கேட்டேன்.

எங்களுடைய போராட்டம் பற்றிய புரிந்துணர்வுடைய அந்த மக்களிடமிருந்து ஒரு மெத்தைகூடப் பெற்றுக்கொள்ள முடியாமல் இவன் திரும்பிவந்ததை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''பிரபுத்துவ மனப்பான்மை கொண்ட இந்தப் பெண்களிடம் நீங்கள்தான் போய் மெத்தை கேளுங்கள் சகோதரி... '' - சிறிது கோபத்துடன் சொன்னான்.

''யார் அது? அது எந்த வீடு? வா அங்கே போய்ப் பார்ப்போம்...'' இவன் ஏதாவது கட்டாயமாகக் கதைத்து அவர்களைக் குழப்பியிருப்பான்...

சேர்க்கக்கூடிய மெத்தைகளில் ஒரு மெத்தை குறைவாகக் கிடைப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல; ஆனால் மக்களுக்கு வெறுப்புண்டாகும்படி நடந்துகொள்வது பாரதூரமான பலாபலனை ஏற்படுத்திவிடுமல்லவா...?

என்னுடன் வர விருப்பமில்லாதவனாய் அவன் ஆணி அடித்ததுபோல அவ்விடத்திலேயே நின்றான். மக்களுக்கு வெறுப்பூட்டும் வகையில் நடந்து கொள்வது கூடாது என்பதை எடுத்துச் சொன்னபிறகே என்னுடன் வருவதற்கு இணங்கினான்.

அந்த வீட்டுக்குள் நாங்கள் போனபோது, வரவேற்பறையில் யாருமே தென்படவில்லை. பல தடவைகள் கூப்பிட்டும் பதிலில்லை. ஆனால் உள்ளே நடமாட்டம் இருப்பது புரிந்தது.

திடீரென, வாசல் திரையை நீக்கிக்கொண்டு ஒரு இளம் பெண் தோன்றினாள். வளைந்த புருவங்களும் அழகிய முகஜாடைகளுமாய் சிறந்த அழகி அவள். புது ஆடைகள் அணிந்திருந்தாள்.

சிறுவன் ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னிக்கும்படி அவளிடம் கேட்டுக்கொண்டேன்.

'அப்படியொன்றுமில்லை' என்று சொல்வது போன்ற முகபாவத்துடன் உதடுகளைக் கடித்து லேசாகச் சிரித்தாள்.

நான் கூறிமுடித்ததும் மேலும் வந்து சிரிப்பை அடக்க முற்படுவது போல உதடுகளை இறுகக் கடித்துக் கொண்டாள்.

நாங்கள் வந்த காரணத்தை எப்படிச் சொல்வது என்று தெரியாமல்

நான் நின்று கொண்டிருக்க சிறுவன் எனது நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்தபடி நின்றான்.

விஷயத்தைக் கூறியபிறகு அவள் சிரிக்கவில்லை. ஏனோ - அடிக்கடி திரும்பி உள்ளே தனது அறையைப் பார்ப்பதும் பிறகு எங்கள் பக்கம் பார்ப்பதுமாக நின்றாள். நான் உண்மையாகத்தான் கேட்டேனா என்பதை அறிய முற்படுவதுபோல என்னையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தாள்.

அடுத்தகணம் மெத்தையைக் கொண்டு வருவதற்காக அவள் உள்ளே போகவும், சிறுவன் உடனே, ''உங்களைப் போலத்தான் நானும் இதையெல்லாம் அந்தப் பெண்ணிடம் சொன்னேன்... அவள்தான் பொருட்படுத்தவில்லை...'' என்று காரமாகக் கூறினான்.

அப்படிக் கதைத்ததற்காக அவன் மீது நான் கோபப் பார்வையை வீசிய போது, அந்த இளம்பெண் மெத்தையும் கையுமாக நின்று கொண்டிருந்தாள். அந்த மெத்தையைத் தருவதற்கு அவள் ஏன் விரும்பவில்லை என்பது மெத்தையைப் பார்த்தபோது விளங்கியது.

பூப்போட்ட துணியினாலான புதிய மெத்தை அது. மெத்தையின் உறை-சிவப்புப் பின்னணியில் வெள்ளை லில்லி மலர்கள் பூத்திருப்பது போன்ற பூவேலைப்பாட்டுடன் அழகாக இருந்தது.

சிறுவனுக்கு எரிச்சலூட்டுவது போல — ''இந்தாருங்கள்'' என்று சொல்லி மெத்தையை என்னிடம் நீட்டினாள். ஏற்கனவே நான் வேறு மெத்தைகளை வைத்திருந்தபடியால், அவள் தந்த மெத்தையை வாங்கிக் கொள்ளும்படி நான் அவனைப் பார்க்க, சிறுவனோ தெரியாதவன் போல நின்றான்.

நான் கூப்பிட்டதும், வேண்டா வெறுப்புடன் மெத்தையைக் கையில் வாங்கிக்கொண்டு வெளியே போவதற்காக அவசரமாகத் திரும்பினான். திரும்பிய வேகத்தில், கதவிலிருந்த ஆணியில் பட்டு அவனது சட்டை தோள்பட்டையடியில் 'படீர்' எனப் பெரிதாகக் கிழிந்தது.

இளம்பெண் புன்னகைத்தபடி, அவனது சட்டையின் கிழிசலைத் தைத்துவிட ஊசி-நூல் எடுத்துவர உள்ளே ஓடினாள். அவன் கவனிக்காதவன்போல மெத்தையோடு வெளியே நடந்தான்.

நாங்கள் சில தூரம் கடந்து சென்றபின் யாரோ சொன்னார்கள். ''அந்தப்பெண் மூன்று நாட்களுக்கு முன்புதான் திருமணமானவளாம். அவள் சீதனமாகக் கொண்டுவந்த ஒரே சொத்து - அந்த மெத்தை''

— இந்தச் செய்தி என்னை ஒரு வித கவலையில் ஆழ்த்தியது. சிறுவனும் கவலையடைந்தவனாய்த் தனது கையிலிருந்த மெத்தையை உற்றுப் பார்த்தபடியே மௌனமாக நின்றான்.

எனது மன உணர்வுகள் போலவே அவனுடையதும் இருந்திருக்க வேண்டும்......

''நாங்கள் இதை வாங்கிக் கொண்டு வந்தது சரியில்லைத்தான்; ஆனால் அவளுடைய திருமண மெத்தையைத்தான் நாங்கள் இரவல் வாங்கினோம் என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்?'' — நடந்தபடியே அவன் இப்படிக் கூறினான்.

''உண்மைதான்... இப்படி ஒரு மெத்தையை வாங்குவதற்கான பணத்தைத் தேடிக்கொள்ள அந்தப்பெண் எத்தனை கஷ்டங்கள் பட்டாளோ...? எத்தனை நாட்கள் நித்திரையை இழந்து மேலதிகமாய் வேலை செய்தாளோ ......?...... ம்... இருந்தும் அவளைப் பிரயுத்துவ மனப்பான்மை கொண்டவள் என்றும் சிலர் சொல்கிறார்களே......'' — அவனைச் சீண்டுவதற்காகவே கடைசி வசனத்தை இப்படிக் கூறினேன்.

சட்டென அவன் நடப்பதை நிறுத்தி, ''இதைத் திருப்பிக் கொடுத்துவிடுவோம்...''— என்றான்.

''இனித் திருப்பிக் கொடுப்பது அவளைப் புண்படுத்துவது போலாகும்'' என நான் கூறியதை ஏற்றுக் கொண்டான்.

''சரி... தேவை முடிந்தபிறகு இதைத் துவைத்து அவளிடமே திருப்பிக் கொடுப்போம்......'' என்று கூறிவிட்டு அதன்பிறகு நிம்மதியடைந்தவனாய், நான் கொண்டுவந்த மெத்தைகளையும் தன்னிடம் வாங்கிக் கொண்டு விரைவாக நடந்தான்.

முதலுதவி நிலையத்தை அடைந்ததும், படையணித் தலைமையகத்துக்கு மீண்டும்செல்ல அவனுக்கு விடை கொடுத்தேன். அவன் முகம் பிரகாசமாகியது. எனக்கு சல்யூட் அடித்துவிட்டு ஓடியவன், ஏதோ நினைத்திருக்க வேண்டும்...... தனது கைப்பையினுள் தடவி — உள்ளேயிருந்த இரண்டு பழைய பணிசுகளை வெளியே எடுத்து என்னிடம் காட்டிவிட்டு - அங்கிருந்த கல் ஒன்றின் மீது அதை வைத்தான்.

''இது உங்களுக்கு இரவுச் சாப்பாடு'' எனக் கூறிவிட்டு விரைவாகச் சென்று மறைந்தான்.

பணிசை எடுக்க நான் போன போது, தூரத்தில் அவன் சென்று கொண்டிருந்தான். அவனுடைய துப்பாக்கிக் குழலைச் சுற்றியிருந்த மரக்கிளையில் இருந்த கிறிசாந்திமம் பூ ஒன்று அவன் காதருகில் அசைந்தாடிக்கொண்டிருப்பது தெரிந்தது. அவனுடைய சட்டையின் கிழிந்த துண்டு காற்றிலே படபடத்துக் கொண்டிருப்பதும் தெரிந்தது. அதைத் தைத்துக் கொடுக்காமல் விட்டதற்காக என் மனம் வேதனைப்பட்டது. குறைந்தது இன்று மாலை வரைக் குமாவது தோள் தெரியும்படி அவன் திரியவேண்டியிருக்கும்......

□

முதலுதவி நிலையத்தில் நாங்கள் அதிகம் பேர் இல்லை...... தண்ணீர் எடுப்பது, உணவு தயாரிப்பது போன்ற சில்லறை தேவைகளுக்காகக் கிராமத்திலிருந்து சில பெண்கள் கூட்டி வரப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தியாய் அந்த இளம் மணப் பெண்ணும்...... என்னைக் கண்டதும் முன்னைப் போலவே உதடுகள் மூடிய படி புன்னகை செய்தாள். அடிக்கடி என்னைப் பார்த்தாள். அப்படிப் பார்த்த போதெல்லாம் வேறு

யாரையோ தேடுவது போல அவள் பார்வை இருந்தது. கடைசியில் கேட்டாள்:

''அந்தத் தோழன் எங்கே போய் விட்டான்?''

''அவன் போர்முனைத் தலைமையகத்துக்குப் போய்விட்டான்'' என்று நான் சொன்னவுடன்; ''மெத்தை கேட்டு வந்தபோது, அவனை உபசரிக்காமல் நான் மோசமாக நடந்துவிட்டேன்'' என்று அதற்காக வெட்கப் படுபவள் போலக் கூறினாள்.

ஏற்கனவே கதவுகளாலும் மேசைகளை ஒன்றாக அடுக்கி வைப்பதனாலும் தயாரிக்கப்பட்டிருந்த கட்டில்களில், மெத்தைகளை நேர்த்தியாக விரித்து நோயாளிகளுக்கான படுக்கைகளைத் தயார் செய்வதில் அந்தப் புது மணப் பெண் ஈடுபட்டாள்.

வெளித் தாழ்வாரத்தின் ஒரு மூலையிலிருந்த படுக்கையில் அவளுடைய அழகான மெத்தையும் போடப் பட்டிருந்தது.

மாலை சாய்ந்ததும் முழுநிலவு வானத்தில் எழுந்தது. தாக்குதல் இன்னமும் ஆரம்பமாகவில்லை.

எதிரியின் பக்கமிருந்து, பயம் காரணமாக அவன் பெரிதாகக் கொளுத்தும் தீயின் ஒளி வழமை போலவே அன்றும் — அது முழுநிலவு நாளாக இருந்தும் தெரிந்தது.

குறிக்கோள் எதுவுமற்ற குண்டு வீச்சுக்களும் எதிரியின் பக்கமிருந்து ஆரம்பமாகின. அதன்காரணமாக — ஒன்றன்பின் ஒன்றாக வானில் தோன்றிய தீச்சுடர்கள் — மெழுகு விளக்குகள் போலத் தோன்றி இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன.

இத்தகைய சூழ்நிலையில் எதிரி மீது தாக்குதலை ஆரம்பிப்பது என்பது மிகவும் சிரமமாகவும், பாரதூரமான இழப்புக்களை ஏற்படுத்துவதாகவுமே இருக்கும். இதை எண்ணிய போது அந்தப் பால் நிலவின் மீது கூட எனக்குக் கடுங்கோபம் ஏற்பட்டது.

எமக்கு உணவும்; வீடொன்றில் தயாரிக்கப்பட்ட 'நிலவு-கேக்'கும் கொண்டுவரப்பட்டன. அன்று முழு நிலவுக்கொண்டாட்டம் என்பது மனதில் தோன்ற — எனக்கு வீட்டு ஞாபகம் வந்தது.

எங்களுடைய ஊரில், முழுநிலவு நாட்களில், ஒவ்வொரு வீட்டின் வாசல் கதவுக்கு வெளியிலும் ஒரு மூங்கில் மேசையில்—வாசனைத் திரவியங்களுடன் மெழுகு திரியும் கொளுத்தப் பட்டு; பழங்களும் நிலவு-கேக்கும் — வேறு உணவு வகைகளும் வைக்கப் பட்டிருக்கும். வாசனைத் திரவியம் எரிந்து முடிந்தவுடன், நிலவுத் தேவதைக்கெனத் தயாரிக்கப்படும் அந்தக் 'கேக்' எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும். 'கேக்' சாப்பிடும் ஆவலில் — மேசையைச் சுற்றி நிற்கும் சிறுவர்கள் வாசனைப்புகை எரிந்து முடியும் நேரத்திற்காகப் பொறுமையின்றிக் காத்திருப்பார்கள்.

'நிலவுத் தாயே... எங்கள் மீது உனது ஒளியைக் கருணையோடு படர விடு' — என்று மேசையைச் சுற்றி நின்று பாடுவார்கள்.

எங்கள் ஊர் — ரியான் முஷா னிலே — தந்தையுடன் உதவியாக அன்று மூங்கில் இழுத்து — இன்று போர்முனையில் நின்று கொண்டிருக்கும் — அந்தச் சிறுவனை நோக்கி எனது எண்ணங்கள் தாவுகின்றன. சில வருடங்களுக்கு முன்னர் இவனும் இப்படித்தான் மேசையருகில் நின்று கேக்கை ருசிபார்க்கும் நேரத்தை எதிர்பார்த்தபடியே அவசரமாய் நிலாப் பாட்டைப் பாடியிருப்பான்.

ஒரு துண்டுக் கேக்கை எடுத்து வாயில் போடுகிறேன். மீண்டும் அந்தச் சிறுவனிடமே எனது எண்ணங்கள் தாவுகின்றன. இந்த நேரம் அவன் என்ன செய்துகொண்டிருப்பான்? படையணித் தலைமையகத்தில் நின்று கொண்டிருப்பான்; .. அல்லது நீண்டு செல்லுகின்ற பதுங்கு குழி ஒன்றில் நடந்துகொண்டிருப்பான் அல்லது கிடங்கு ஒன்றினுள் அமர்ந்திருப்பான்.

□ □ □

சிறிது நேரத்தில் எங்கள் பக்கத்தில் துப்பாக்கிகள் முழங்கின. ரவைகள் தீப்பிழம்புகளாய் வானத்தில் அங்குமிங்கும் பறந்துகொண்டிருப்பது தெரிந்தது.

தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது. சில நேரங்களுக்குள்ளேயே எங்கள் முதலுதவி நிலையம் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிட்டது. காயமடைந்தவர்கள் கொண்டுவரப்பட்டார்கள். காயமடைந்தவர்களின் பெயர்களையும், பிரிவுகளையும் நான் பதிவுசெய்து வைத்துக்கொண்டேன். படுகாயமடைந்து மயக்க நிலையில் கிடந்தவர்களின் விபரத்தை, அவர்களுடைய உடைகளில் காணப்பட்ட பட்டியல்களின் மூலம் பெற்றுக் கொண்டேன்.

படுகாயமடைந்த ஒருவனுடைய விபரங்கள் எடுப்பதற்காக அவனுடைய பட்டியலைப் பார்த்தபோது — "*Messenger*" (தொடர்பாளன்) என அதில் காணப்பட்ட எழுத்துக்களால் எனது இதயம் ஒரு கணம் துடிப்பை மறந்தது.

'அவனாக இருக்குமோ...?'

இல்லை... அவனில்லை... இவன் ஒரு படைப்பிரிவின் தொடர்பாளன். அவன் — எனது சிறுவன் — படையணித் தலைமையகத்தின் தொடர்பாளன்.

தாக்குதல் ஆரம்பமாகி ஒருமணி நேரத்துக்கு மேலாகிவிட்டது. அவ்வப்போது காயமடைந்து வந்தவர்களிடம் விசாரித்தபோது, எங்கள் தரப்பில் முதலாவது தடைவேலி, அதன்பிறகு முட்கம்பித் தடை, என்பவற்றை எமது படைகள் தாண்டி, அதற்கப்பால் முதல் இருந்த காவலரணையும் கைப்பற்றிய பின், வீதிகளில் போர் நடந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதன் பிறகு — போர் நிலைமைகளின் முன்னேற்றம் பற்றிய செய்தி எதுவுமே கிடைக்கவில்லை.

'தொடர்ந்தும் போர் நடந்து கொண்டிருக்கிறது' - என்றோ, 'வீதிகளில் போர் நடக்கிறது' என்றோ தான் செய்திகள் கிடைத்தன.

ஆனால், காயம்பட்டு வந்தவர்களின் உடல்களை மூடியிருந்த சேறும் சேற்றிலிருந்து கிண்டியெடுக்கப்பட்டவை போன்ற தோற்றத்துடன் காணப்பட்ட 'ஸ்ட்ரெச்சர்'களும் (*Stretcher*) போரின் தீவிரத்தன்

மையை எமக்கு உணர்த்தின. விரைவில் 'ஸ்ட்ரெச்சர்கள்' பற்றாமல் போயின. இதனால் படுகாயமடைந்தவர்களை உடனுக்குடன் மருத்துவ மனைக்கு அனுப்பமுடியவில்லை.

காயமடைந்தவர்களின் முகம், கைகள் என்பவற்றைக் கழுவச் செய்து குடிக்க முடிந்தவர்களுக்குச் சிறிது சூப் கொடுத்து, சிலருக்கு உடைகள் மாற்றச் செய்து, இவற்றைத் தவிர அவர்களுடைய வலியைக் குறைப்பதற்கு என்னால் வேறெதுவும் செய்ய முடியவில்லை.

சில நோயாளிகளுக்கு, உடைகளை முற்றாகக் களைந்து, பெருகும் இரத்தத்தைக் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டியிருந்தது. ஏற்கனவே பழக்கப் பட்டுவிட்டதனால் இந்தப் பணி எனக்கு வித்தியாசமாகத் தெரியவில்லை. ஆனால் உதவிக்கு நின்றிருந்த கிராமத்துப் பெண்கள் இவ்வாறு செய்வதற்குக் கூச்சப்பட்டார்கள். தாங்கள் சமையல் வேலைகளையே செய்வதாகக் கூறிவிட்டார்கள். அரும்பாடுபட்டு, அந்தப் புதுமணப் பெண்ணை, என்னுடன் நின்று பணிபுரிவதற்குச் சம்மதிக்கவைத்தேன்.

போர்முனையில் வெடிச் சத்தங்கள் ஒழுங்கற்றுக் கேட்டுக்கொண்டிருந்தன. விரைவில் பொழுது விடிந்து விடும் என எண்ணிக்கொண்டு நேரத்தைப் பார்த்தேன். அது நள்ளிரவு. சந்திரன் பிரகாசமாய், வழமையை விட உயரத்தில் தெரிந்தான். தொடர்ந்து, மிக மோசமாகக் காயமடைந்த ஒருவன் கொண்டுவரப்பட்ட போது ஏற்கனவே உள்ள படுக்கைகள் நிரம்பியிருந்ததால் வெளித்தாழ்வாரத்தில் ஒரு படுக்கையில் அவனை விட வேண்டியேற்பட்டது.

அவனைப் படுக்கையில் கிடத்திய பின்னரும் அவனைத் தூக்கி வந்தவர்கள் திரும்பிச் செல்லாமல் அங்கேயே குழுமி நின்றார்கள். அவர்களில் சற்று வயதுமுதிர்ந்த ஒருவன் என்னை மருத்துவர் என எண்ணியிருக்க வேண்டும்......

ஆவலுடன், ''டொக்டர்... எப்படியாவது இவனுடைய உயிரைக் காப்பாற்றுங்கள் ..... உங்களுக்கு ஒரு செங்கொடி பரிசாகத் தருவோம்...'' என்று எனது கைகளைப் பிடித்தபடி கூறினான்.

அவனைக் குணப்படுத்தும் வழி வகை நிச்சயமாய் என்னிடம்தான் இருப்பதுபோல, வந்திருந்த மற்றவர்களும் கண்களை அகலவிரித்து என்னையே பார்த்தபடி நின்றார்கள்.

நான் அவர்களுக்குப் பதில்கூற முற்பட்ட சமயம், கையில் தண்ணீருடன் அங்குவந்த புதுமணப் பெண், ஸ்ட்ரெச்சரில் கிடந்தவனைக் கண்டு வீரிட்டு அலறினாள். மற்றவர்களை விலக்கிக் கொண்டு அப்போதுதான் நானும் பார்த்தேன்.

அவன்...... அந்தச் சிறுவன்;

கபடமற்ற, அவனுடைய சிவந்த வட்டமான முகம், இப்போ வெளிறிப் போய்க்கிடந்தது. கண்கள் அமைதியாய் மூடிக்கிடந்தன. அவனுடைய கிழிந்தசட்டை இப்போதுகூடத் தொங்கிக்கொண்டிருந்தது.

''அவன் எங்கள் உயிரைக் காப்பாற்றவே இதைச் செய்தான்'' என்று பச்சாதாபத்தோடு கூறிய முதியவர் தொடர்ந்தும் கூறினார்.

''முன்னேறிப் போவதற்காக நாங்கள் பத்துப்பேர் ஒரு ஒழுங்கையில் நின்றிருந்தபோது, இவன் எமக்குப் பின்னால் நின்றான். அதே நேரம், எதிரிகள் சிலர் கூரை ஒன்றின் மேலிருந்து வீசிய கைக்குண்டு எம்மை நோக்கிப் புகைந்தபடி வந்தது. ''குப்புற விழுந்து படுங்கள்'' என எங்களிடம் உரத்துக் கூவியவாறே அவன் அந்தக் குண்டைத் தன்னோடுசேர்த்தபடி குப்புற விழுந்தான் .....''

மணப்பெண், பொங்கிவந்த அழுகையை அடக்குவதற்காக மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட்டாள்.

எனது கண்களில் நிறைந்த நீரை அவர்கள் காணாதவாறு மறைத்துக்கொண்டு, அவர்களை அனுப்பிவிட்டு நான் திரும்பியபோது, விளக்கு ஒன்றைக் கொளுத்திவைத்துவிட்டு அவள் — மணப்பெண் — அவனுடைய மேற்சட்டையைக் கழற்றிவிட்டு உடலை மெதுவாகத் துடைந்துவிட்டுக் கொண்டிருந்தாள்.

நெடிய தோற்றமுடைய அந்தச் சின்னஞ்சிறுவன் பேச்சு மூச்சற்றுக் கிடந்தான். நான் மருத்துவரை அழைத்துவர ஓடினேன். அவனுக்கு ஊசி போடுவதற்காக மருத்துவருடன் நான் திரும்பியபோது, அவள், சிறுவனருகில் அமர்ந்தபடி அவனது சீருடையின் கிழிசலைத் தைத்துக்கொண்டிருந்தாள்.

ஸ்டெதஸ்கோப்பை வைத்துப் பரிசோதித்த மருத்துவர் ஆழ்ந்த பாவனையோடு நிமிர்ந்து; ''நாங்கள்-செய்யக்கூடியது எதுவுமில்லை'' என்று கூறினார்.

அருகில் போய்ச் சிறுவனுடைய கைகளைத் தொட்டுப் பார்த்தேன். அவை விறைத்துப் போய்க்கிடந்தன. இவை எதையுமே கண்டதாகவோ, கேட்டதாகவோ இல்லாதவள் போல அந்தப்பெண், தொடர்ந்தும் ஒவ்வொரு தையலாகத் தைத்துக்கொண்டேயிருந்தாள். அவள் அப்படியிருப்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. 'தைக்க வேண்டாம்'' என அவளிடம் மெதுவாகக் கூறினேன். நிமிர்ந்து ஆச்சரியமாய் என்னைப் பார்த்தவள், மீண்டும் மௌனமாய் — ஒவ்வொரு இழையாகத் தையல் வேலையைத் தொடர்ந்தாள். அவளை அந்த நிலையிலிருந்து மீட்க — சந்தோஷமற்ற அந்தச் சூழ்நிலையைக் கலைத்துவிட, அந்தச் சிறுவன், எழுந்திருந்து வெட்கத்துடன் சிரிக்கும் காட்சியைப் பார்க்க வேண்டும் என — இவை எல்லாவற்றுக்காகவும் என் மனம் ஏங்கியது. எனக்கென அவன் தந்து சென்ற பழைய பணிஸ் இன்னமும் என் சட்டைப் பையில் பத்திரமாய் இருந்தது.

உதவியாளர்கள் சவப்பெட்டியுடன் வந்து, முதலில் அவனைக் கிடத்தியிருந்த மெத்தையை அகற்றினார்கள்.

மணப்பெண்ணுடைய முகம் திடீரெனப் பேயறைந்ததுபோல ஆயிற்று. வெடுக்கென மெத்தையைப் பறித்தவள் — அதன் பாதியைப் பெட்டியின் அடிப்பாகத்தில் விரித்து - மீதியை அவனது உடலை மூடிக் கொள்ளக் கூடியதாய் வைத்துக் கொண்டாள்.

''இந்த மெத்தை கிராமத்து மக்களில் யாரோ ஒருத்தருடையது'' என ஒருவன் சொன்னான்.

''அது என்னுடையது'' — என்று கூறிவிட்டு மறுபுறம் திரும்பிக் கொண்டாள். கண்களில் திரண்டிருந்த கண்ணீர் நிலவின் ஒளியில் பளபளத்தது.

தாய்மையான உள்ளத்துக்கும் அன்புக்கும் அடையாளமான வெள்ளை லில்லி மலர்கள் பொறிக்கப்பட்ட அந்தச் சிவப்பு மெத்தையால் சிறுவனுடைய முகத்தை அவர்கள் மூடுவதைப் பார்த்தபடியே நான் நின்றேன். □□

வாய்க்காலில் வந்து விழுந்து
வழிந்தோடிப் பாய்கின்ற இரணைமடுக்
குளநீரில் சிலநாள் குளித்தேன் — தென்னை
இளநீரும் மனம்போலக் குடித்தேன்!
மானோடு மரைபன்றி மனமள்ளும்
தேனோடு தயிர்தின்றேன் சிலநாள்!

அப்பப்பா! என்ன அழகவை...?
அலுக்குமோ வன்னி நிலமது?
அப்பப்பா விதைத்த வயல்வெளியில்...
அந்நியர் வருவதை விடுவதோ? — இல்லை
முல்லையும் மருதமும் நெய்தலும்
எல்லையெனக் கொண்டமண்ணை நாம்விடோம்!

கற்சிலை மடுவில் கணநேரம் நின்று
காவியவீரன் ஒருவனைக்
கண்களில் இருத்திக் கொண்டேன்!
பொற்பதியாம் வன்னி மண்ணில்
அவன் பதித்த காற் தடங்கள்...
அழியாத கோலமாய் நிற்கக் கண்டேன்!

## வன்னி மண்ணில் எனது கால்கள்...

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்



ஆகா! பண்டார வன்னியா!
போர்முரசு கொட்டி நீபுரிந்த — அந்தக்
கார்காலக் கனவுகளை
எம்தலைவன்...
கட்டாயம் நனவாக்குவான்; காத்திரு!

வாளெடுத்து அவன்வீசி நடந்துசென்ற
வாய்க்காலின் கரையெங்கும் நான்நடந்தேன்!
நாயாற்றுப் பாலத்தில் நிமிர்ந்து நின்று
நம்மரிய எல்லைமண்ணைப் பார்த்தேன்;
பேய்களுடன் போரிடும் புலிவீரர்கள்...
பாய்ந்து செல்லும் கானகத்து வளங்கண்டு
கணப் பொழுது பெருமை கொண்டேன்!

அலம்பில் காடுகளில் மாலை வேளையிலே ..
குலுங்கும் கிளைகளில் அமர்ந்திருந்து...
சுதந்திரமாய்ப் பாடுகின்ற பறவைகளின்
இதந்தரும் இனிய பாடல் கேட்டேன்!
ஆகா! இங்குதானா என்தலைவன் — அன்று
இந்தியாவை எதிர்த்துநின்று சமர்புரிந்தான்?


கனிசொரியும் மணலாற்றுக் காடுகளே!
காவிய வீரனைக் காத்துத் தந்த...
இனிமைதரும் எம்மெல்லைக் கோடுகளே!
பொறுமையுடன் நீங்கள் புரிந்த
அருமைச் செயல்கண்டு; நேரிலின்று
நன்றியினைச் சொல்கின்றேன்; நன்றி! நன்றி!!

அழகுச் சேலைகட்டி ... இயற்கைமகள்...
அணிகலன்கள் பலபூட்டி நடந்துசெல்லும்
செழுமைதரும் செம்மலையின் மேகங்களே!
எழுதவரும் இனியகவி கோடி...கோடி...
எழுந்துவரும் எம்மினிய வன்னிமண்ணே!
ஒருபோதும் நானுன்னை மறவேன்; நன்றி!

□□

# வழுக்கையாறு வழிவந்த வரலாறு

செ. கிருஷ்ணராசா




யாழ்குடாநாட்டின் சமூக — பண்பாட்டுருவாக்கத்தில் இயற்கையமைப்பும் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வகையில் குடாநாட்டின் தாய் நிலப் பகுதியில் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும், தொண்டைமானாற்றிற்கு கிழக்கே மாயக்கை நீரேந்துபரப்பும் மக்கள் வாழ்வின் ஜீவனோபாய முறைகளில் செல்வாக்கினைச் செலுத்தியிருந்தமைக்கான தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக மாயக்கையிலிருந்து சேகரிக்கப்பட்ட புராதன — மத்தியகாலப் பகுதிக்குரிய மட்பாண்ட ஓடுகள், கீச்சுக்கிட்டங்கள் (*Iron slag*), நாணயங்கள், மணிகள், கல்லில் செய்யப்பட்ட கருவிகள் போன்றன சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. இதே போன்று வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் ஓரங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட கல்லாகிப்போன உயிரினச் சுவடுகள், மிகவும் காலத்தால் முந்திய மட்பாண்ட ஓடுகள், நாணயங்கள் போன்றன இப்பிராந்தியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவற்றுள் எவையுமே திட்டமிடப்பட்ட தொல்லியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படாத நிலையில் இருந்துகொண்டிருப்பினும் கூட, கந்தரோடையிலிருந்தும், ஆனைக்கோட்டையிலிருந்தும் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பண்பாட்டு எச்சங்கள் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு கொண்டிருந்திருக்கக் கூடிய பண்பாட்டுப் பங்களிப்பினையும், அவற்றின் முக்கியத்துவத்தினையும் உணரவைக்கின்றன.

அளவெட்டி — தொல்புரம் — எள்ளாலை (ஏழாலை) ஆகிய மையங்களை இணைக்கின்ற நீரேந்துபரப்பிலிருந்து மாரி காலத்தில் உருவாகும் நீரோடையானது, வளைந்து வளைந்து சென்று ஆனைக்கோட்டையில் யாழ்ப்பாணக் கடனீரேரியுடன் சங்கமமாவதையே வழுக்கையாறு என்கிறோம். மாரிப் பருவத்தில் மாத்திரம் இப் பள்ளத்தாக்கில் நீர் நிறைந்து அலைகள் தோன்றுவதனைக் காணலாம். கோடை காலத்தில் ஆங்காங்கு வற்றாத கோடையூற்றுக்களாக அப்பள்ளத்தாக்கில் நிலைத்து நிற்கும் நீர்ச்சுனைகளிலிருந்து மக்கள் பயிர்ச் செய்கைக்காக நீரைப் பயன்படுத்துகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடரும் இச்செயற்பாடானது, அப்பள்ளத்தாக்கினை மையப்படுத்தி வாழும் மக்களது வாழ்விலும் உணர்விலும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. தமிழகத்தில் காவிரி நதிப் படுக்கை எவ்வாறு மக்கள் வாழ்வின் உயி

ரோட்டமாக விளங்கியதோ அதேபோன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு மக்களது ஜீவனோபாயத்துடன் ஒன்றித்திருந்தது எனலாம். அப்பின்னணியில் மக்களது சமய வாழ்வும் மலர்வதற்கும் அப்பள்ளத்தாக்கு வழி சமைத்துக் கொடுத்திருந்தது.

யாழ்ப்பாணத்தின் சமூக உருவாக்கம் பற்றி ஆராய்வோருக்கு வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு வளமான சான்று சேர்க்கும் மையமாக அமையும் என்பதும் எமது நம்பிக்கையாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஏனைய பிராந்தியங்களை விடவும், வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிலேயே பூர்வீகக் குடியிருப்புக்களையும், பாரம்பரிய சமூகக் கட்டுக்கோப்பு முறைகளையும் கண்டுகொள்ளமுடிகிறது. இவ்வாறான சமூக உருவாக்கத்துக்கான உற்பத்தியுறவினையும், உற்பத்தி முறைகளையும் உருவாக்கிக் கொடுத்த ஒரு மையம் என்ற வகையில் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் வரலாற்றுப் பின் புலம் எதிர்காலத்தில் நன்கு ஆராயப்பட வேண்டியதாகவுள்ளது.

## உற்பத்தி வேளாண்மை-
## மேலதிக உற்பத்தி-
## நகரவாழ்வு

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் கோடைப்பருவத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் எள்ளு, குரக்கன், தினை, சாமை, பூசினி போன்ற பயிர்வகைகளையே உற்பத்தி செய்தனர். மாரிகாலத்தில் நெல்வேளாண்மை சிறப்பிடத்தினைப் பெற்று வந்தது. ஆனைக்கோட்டை ஈறாக மாரிப் பருவத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனைக்கோட்டை என்ற மையமானது எள்ளு உற்பத்திக்கும் எண்ணெய் ஊற்றும் கைத்தொழிலுக்கும் அன்றுதொட்டு இன்றுவரைக்கும் சிறப்பிடம் பெற்று வருவதனைக் காணலாம். இப்பொழுது ஏழாலை என்று அழைக்கப்படும் மையமானது புராதன காலத்தில் எள்ளு ஆலைகள் நிறைந்த தொழிற்களமாக விளங்கியிருந்திருக்க வேண்டும். 'எள்ளாலை'ப் பெருங்குடி மக்கள் 'கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கலாம்' என்ற தத்துவத்தினை நன்கு தெரிந்து வைத்திருந்தவர்கள். எள்ளுணவு வகை செய்வதில் கை தேர்ந்தவர்கள். வழுக்கையாற்றின் வழி சென்று பொருளீட்டிய பெருமக்கள் இவர்களாவர். இதே போன்று தொல்புரம் (தொள்புரம்) அளவெட்டி (அளைவெட்டி) பிராந்திய மக்களும் வழுக்கையாற்று வழி சென்று தத்தமது ஜீவனோபாயத்தினை அமைத்து வாழ்ந்தவர்களாகும். இவ்வாறு உற்பத்தி வேளாண்மைத் துறையில் மிகவும் உந்து சக்தியாக விளங்கிய இப்பள்ளத்தாக்கானது மேலதிக உற்பத்தி முறைமை உருவாவதற்கு உரிய பல சாதகமான நிலைகளைத் தன்னகத்தே கொண்டிருந்ததில் வியப்பேதுமில்லை. இப்பின்னணியில் இப்பள்ளத்தாக்கின் ஓரமாக நகரங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வகையில் கந்தரோடை என்ற நகரத்தின் தோற்றமானது பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு-வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட்டவுடன் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த மையமாக வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இதனால் பல்வேறு வகையான பண்பாட்டு அம்சங்கள் அவ்விடத்தில் காலத்திற்குக் காலம் மையம் கொள்வதற்கும் வாய்ப்பாயிற்று. இவ்வாறான ஒரு நிலைக்கு வடிகாலாக அமைந்தது வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கென்றே குறிப்பிட வேண்டும். இதனால் யாழ்ப்பாணத்து பண்பாட்டு மரபுகள் பலவற்றுடனும் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும் இணைத்துக் கூறப்படுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.

## காலத்தால் முற்பட்ட பண்பாட்டு மரபுகள்:

'கடவை' என்று முடியும் இறுதிப் பெயர்ச் சொற்கள் பல இக்குடா நாட்டின் குறிப்பிட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்களில் காணப்படுவது அவதானிக்கத் தக்கது. ஆயக்கடவை, அங்கண் அம்மைக் கடவை, பெருமாக்கடவை, கந்தவனக் கடவை, இலுப்பைக்கடவை என்பன அவற்றுள் சிலவாகும். பண்பாட்டு மரபுகள் பரிமாற்றத்திற்குட்பட்ட முதல் மையங்களே 'கடவை' என்று வழங்கும் இறுதிப்பெயர்ச் சொற்களுடன் காணப்படுகின்றன எனலாம். அவ்வகையில் அங்கண் அம்மைக் கடவை என்ற மையமும் பண்பாட்டு மரபு ஒன்றுடன் இணைத்துக் கூறப்படுவதனைக் காணலாம். இம்மையமானது கந்தரோடைக்கு நேர்மேற்கே, பள்ளத்தாக்கிற்கு அப்பால் அமைந்துள்ள கல்வளைப்பிள்ளையார் கோவிலுக்கு வட திசையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அங்கண் அம்மைக் கடவையில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் கோவில் மிகவும் புராதனம் வாய்ந்தது என்று கூறப்படுகின்றது. இப்புராதனக் கோவிலுடன் தொடர்புபட்ட மரபானது ஈழத்திற்கு கண்ணகி வழிபாடு பரவிய பண்பாட்டுப் பின்புலத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. சேரநாட்டில் சேரன் செங்குட்டுவன் மதுரையை எரித்த கண்ணகியை தெய்வமாக்கி, அத்தெய்வத்திற்கு இமயத்துக் கல்லில் சிலை வடித்து, விழா எடுத்த சமயத்தில் இலங்கை மன்னனான முதலாம் கயவாகு வேந்தனும் உடனிருந்து பங்கு கொண்டான் எனவும், பின்னர் அம்மன்னன் திருவடி நிலையில் வந்திறங்கி அங்கண் அம்மைக் கடவையில் 'மதுரையை எரித்த கண்ணகிக்கு' தனது முதற் கோயிலை நிர்மாணித்துவிட்டு பின்னர் வழுக்கையாற்றினூடாகப் பயணம் செய்து, தனது வாழ்விடத்திற்கு மீண்டான் எனவும் மரபுக் கதைகள் வாயிலாக அறிய முடிகின்றது.

சேர நாட்டிற்கும் ஈழ நாட்டிற்கும் இடையிலான தொடர்புகள் பெருமளவுக்கு வாணிப முயற்சிகளினூடாகவே கையாளப் பட்டிருக்கவேண்டும். தென்னிந்தியாவில் வாணிப முயற்சிகளில் ஈடுபட்ட ரோம வியாபாரிகள் ஈழத்திற்கு நேரடியாக வந்து அம்முயற்சிகளில் ஈடுபட்டிருக்கவில்லை. பதிலாக சேரநாட்டு வியாபாரிகளினூடாகவே அவ்வாணிப முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டமைக்கான சான்றுகளை மகாவம்சம் போன்ற இலக்கியங்களினூடாக அனுமானிக்க முடிகிறது. இக்காரணத்தினாலேயே சேரன்- செங்குட்டுவன்- கஜபாகு உறவு மிகவும் நெருக்கமடைந்திருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள 'செங்குந்தர்' (செங்குட்டுவர்), 'கட்டுவன்' போன்ற பெயர்கள் சேர நாட்டுடன் கொண்ட தொடர்புகளின் அடியாகவே பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இப்பின்னணியில் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும் சேரநாட்டு — ஈழநாட்டு வியாபாரிகளுக்கு மரக்கலம் ஓட்டுவதற்கு சாதகமான நிலையை தோற்றுவித்திருந்தது எனலாம்.

பாண்டிய நாட்டில் சமணமும், சோழ நாட்டில் பௌத்தமும் மக்களுடைய எதிர்ப்பியக்கத்திற்குள் அகப்பட்டமையைத் தொடர்ந்து பௌத்தமானது தனது வாழ்வுக்கும், வளர்ச்சிக்குமான வழிவகைகளை அயல்நாடுகளிலும் தேடிக்கொள்ள முற்பட்டது. இச்சூழலில் இலங்கையிலும் பௌத்தம் பரவிக்கொண்டது. இவ்வாறான பௌத்தப் பண்பாட்டின் இலங்கை வருகையில் அதன் ஒரு பிரிவானது சேரநாட்டினூடாக வட இலங்கைக்கு எடுத்துவரப் பட்டிருக்கலாம் எனக் கருதுவதற்கு உதவும் சில சான்றுகளை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில், குறிப்பாக கந்தரோடையில் கண்டு கொள்ள முடிகிறது. கந்தரோடை

யில் காணப்படும் பௌத்த எச்சங்கள் வெளிப்படுத்தி நிற்கின்ற கலை மரபுகளில் சேரநாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்ட அமராவதிப் பண்புகளின் சாயலை அவதானிக்க முடிகிறது. பழந்திராவிடத்தின் ஒரு பிரிவான சேரநாடு பௌத்தத்தின் செல்வாக்கிற்குட்பட்ட நிலையில் பௌத்தக் கலைக்கூறுகளான ஸ்தூபி, விகாரைகள், புத்தர் உருவங்கள் போன்றவற்றைக் கொண்டிருந்தன. தனித்துவம் வாய்ந்த ஸ்தூபி அமைப்பு முறைகளை சேரநாடு கொண்டிருந்தமை அவதானிக்கத்தக்கது. சிலப்பதிகாரப் பண்பாட்டினைத் தோற்றுவித்த அதே சேரநாடு, பின்னர் மணிமேகலைகண்ட துறவுவாழ்வினையும் கண்டு கொண்டது என்றால், அது சேரநாட்டின்அமைவு எந்தளவிற்குப் பண்பாட்டுப் பரிமாற்ற முறைகளில் பங்கெடுத்திருந்தது என்பதனை நிரூபிப்பதாக அமையும். கந்தரோடையிலும் இவ்வாறான பண்பாட்டுவளர்ச்சி ஏற்பட்டிருந்தது என்பதனை கிடைத்துள்ள ஒரு சில சான்றுகள் வாயிலாக வெளிப்படுத்த முடிகிறது.

## கந்தரோடை — தமிழ்ப் பௌத்த மையமா?

கந்தரோடை தொடர்பான தொல்லியல் சான்றுகள் இதுவரையில் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பிரகாரம் அடிப்படையில் திராவிடப் பண்பாட்டுக்குரியதாகவும், மேற்படையில் பாளி பௌத்தப் பண்பாட்டுக்குரியதாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இங்கு பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிடப் பழங்குடியினரே முதலில் வாழ்க்கையினைத் தொடங்கியிருந்தனர் என்பதும், பின்னரே பௌத்தப் பண்பாடு வந்து மையங்கொண்டிருந்தது என்பதும் இப்பொழுது பெருமளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மிகப் பூரணத்துவமான வகையில் தொல்லியல் அகழ்வாய்வினை கந்தரோடையில் நடாத்தி முற்றுவிக்கப்படும்வரைக்கும் கந்தரோடை பற்றிய காலமும் கருத்தும் ஐதீகமளவிலேயே இருந்து கொண்டிருக்கும். இந்நிலையில் கந்தரோடை பற்றிய வரலாற்று — பண்பாட்டுப் பகைப்புலமானது பலராலும் திரிபுபடுத்தப்பட்டு, காலத்திற்கேற்ற வகையில், காலத்தின் தேவைகருதி, அவ்வவர்க்குச் சாதகமாக எடுத்துக் கூறப்பட்டு வருவதனைக் காணலாம். கந்தரோடையில் எவ்வாறு பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன என்பதும் அதனை எவ்வாறு பண்பாட்டு ஆய்வாளர்கள் இனிமேல் விளங்கிக் கொள்ளவேண்டும் என்பதனைக்கண்டு கொள்வதும் எதிர்கால அதிகாரமாற்றங்களினூடாகவே தீர்மானிக்கப்பட வேண்டியவையாகிவிட்டன.

கந்தரோடையில் பௌத்தம் தொடர்பான தொல்லியல் எச்சங்கள் பெருங்கற்காலத் திராவிடப் பண்பாட்டுக்குரிய மண்படை அடுக்குகளுக்கு மேல் அமைந்து காணப்படுகின்றன. ஆனால் ரோமப் பண்பாட்டுக்குரிய எச்சங்கள் இவ்விரண்டு நிலைகளிலும் கலந்து காணப்படுகின்றமை இங்கு அவதானிக்கப்பட வேண்டிய ஓரம்சமாகும். தென்னிந்தியாவில் ரோமப் பண்பாட்டுக்குரிய தொல்லியல் எச்சங்கள் பெருமளவுக்கு பெருங்கற்காலத் திராவிடப் பண்பாட்டுடன் இணைந்து காணப்படுவதனை அவதானிக்கலாம். ஆனால் கந்தரோடையிலும் கேரளத்திலும் ரோமப் பண்பாட்டுக்குரிய தொல்லியல் எச்சங்கள் திராவிட — பௌத்தப் பண்பாட்டுக்குரிய மண்படைகளுடன் கலந்து - இணைந்த வகையில் காணப்படுகின்றன. இந்நிலமையானது நாம் எதிர் நோக்கும் சிக்கலை ஓரளவுக்காவது விடுவிப்பதற்கு உதவுவதாகலாம்.

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் அருகில் வளர்ச்சி பெற்ற இந்நகரமானது முதலில் விவசாயப் பொருளாதார நடவடிக்கைகளின் பின்னணியில் தோற்றுவிக்

கப்பட்டது என்பதனை எவருமே மறுக்க முடியாது. அதாவது பெருங்கற்காலத் திராவிட — விவசாய மக்களே இந்நகரத்தின் தோற்றத்திற்கும், அதன் வளர்ச்சிக்குமுரிய அடிப்படைகளை அமைத்துக் கொடுத்திருந்தனர் என்பதாகும். பின்னர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வியாபார நடவடிக்கைகளின் பின்னணியில் சர்வ சமூகங்களையும் உள்ளடக்கிய ஒரு வியாபார மையமாக கந்தரோடை வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பதனை அங்கிருந்து கண்டெடுக்கப்பட்ட பிராமி - பிராகிருத, சிங்களக்கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறான ஒரு வளர்ச்சி நிலைக்கு வழுக்கையாற்றினூடாக இடம் பெற்றிருந்த மரக்கலங்களின் பயணங்கள் உதவியிருந்தன என்பதும் தெளிவாகிறது. 'நல்லதேவன்துறை' என்ற பெயரில் ஒரு பழம் கிராமம் அங்கு இன்றுவரைக்கும் இருந்துகொண்டிருப்பது நாவாய் போக்குவரத்து நடைபெற்றிருந்தமைக்குச் சிறந்த உதாரணமாகின்றது.

மரக்கலங்களின் பயணங்களும் சர்வதேசவியாபார நடவடிக்கைகளும் தடைப்படாது அபிவிருத்தியடைந்து வந்தது வரையில் கந்தரோடையில் பௌத்தமும் செழிப்புற்றிருந்தது எனக்குறிப்பிடலாம். சிலப்பதிகாரகாலச் செழிப்பின் பின்னணியில் அங்கண் அம்மைக்கடவை தோன்றியது போன்று, மணிமேகலையின் துறவின் பின்னணியில் கந்தரோடை வளர்ச்சிபெற்றது எனக் கூறினால் அது மிகையாகிவிடமுடியாது. வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் எதிரும் புதிருமாக இவ்விருமையங்களும் அமைந்திருப்பது இரட்டைக் காப்பியங்களுக்கும் ஈழத்துக்கும் உள்ள உறவினை வலுப்படுத்த உதவுகின்றது ஆகலாம். ஆனால் அவை இரண்டுமே சேரநாட்டுத் தொடர்பினால் வலுப்படுத்தப்பட்டவை என்பதனை மறந்துவிடலாகாது.

## சேரநாடு – கந்தரோடைத் தொடர்புகள்

கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட வட்டமானதும், சதுரமானதுமான பௌத்தக்கட்டிடங்களின் அத்திபாரங்களது தோற்றப்பாடானது தாய்லாந்திலும், கேரளாவிலும் காணப்படுகின்றனவற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. அடிப்படையில் இப்பௌத்தக்கலையம்சங்கள் ஆந்திரமரபுக்குரியவையாகக் காணப்படுகின்ற பொழுதிலும், கந்தரோடையில் காணப்படுகின்ற பௌத்த மதத்திற்குரிய கட்டிடக்கூறுகளில் கேரளநாட்டுக்குரிய தனித்துவமான கட்டுமான அம்சங்கள் பொருந்தியுள்ளன. அவற்றுள் ஒன்று கடற்பவளக்கற்களைக் கட்டிடங்களுக்குப் பயன்படுத்தும் முறைமையாகும். கேரளாவில் போர்க்களம், பாலக்காடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட, கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதலாம் நூற்றாண்டுக்குரிய ஸ்தூபிகள், கடற் பவளக்கற்களினால் கட்டப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கந்தரோடையிலும் கடற் பவளக்கற்களினால் கட்டப்பட்டவை பெரிதும் கேரள ஸ்தூபி அமைப்புமுறையினைக் கொண்டுள்ளன.

கந்தரோடையில் வெளிப்படுத்தப்பட்ட பௌத்தக்கட்டிடக்கூறுகளுள் தூண்களைத் தாக்குகின்ற துளைகற்கள், கற்றகடுகள் போன்றன கேரள நாட்டு கற்கட்டுமானக் கலையினடியாக உருவாக்கப்பட்டிருந்தன. கேரள நாட்டில் பாறைப்பரப்புக்களில் நுண்டுளைகள் இடும் முறையைப் பின்பற்றியே கந்தரோடையில் ஸ்தூபிகளின் உச்சிக்கற்கள் துளையிடப்பட்டிருந்தன. மேலும் மிகப்பெரிய உச்சிக்கல் ஒன்றின் நடுப்பாகம் கல்லறைபோன்று அகழப்பட்டு விலையுயர்ந்த நவரத்தின மணிகள் இட்டு வைக்கப்பட்டிருந்த முறைமையும் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதுவும் கேரள கட்டிடக்கலை மரபினையே வெளிப்படுத்துவதாக உள்ளது. இவை எல்லாவற்றுக்கும்

மேலாக கந்தரோடை அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட 'திருகுகற்கள்' (தானியம் அரைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டவை) கேரளநாட்டுப்பாணியை அப்படியே வெளிப்படுத்துவதாகவுள்ளது. இன்னும் பல அம்சங்களை ஆய்வின் அடிப்படையில் எதிர்காலத்தில் எடுத்துக் காட்டமுடியும். இப்பின்னணியில் சேரநாடு - புராதன கந்தரோடைபற்றிய தொடர்புகளை மேலும் ஆராயவேண்டும். அவ்வழியே வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் வரலாற்று முக்கியத்துவத்தினையும் மேலும் ஆராயக்கூடிய நிலை உருவாகலாம்.

சிலப்பதிகாரகாலப் பண்பாட்டினைத் தொடர்ந்து மணிமேகலையின் 'அறஒளி' தோன்றியமைபோன்று கந்தரோடையிலும் பண்பாட்டுமாற்றங்கள் நிகழ்ந்துவந்துள்ளன. அப்பண்பாட்டு மாற்றங்களுக்கெல்லாம் மூதுகெலும்பாக வழுக்கையாற்றுப்பள்ளத்தாக்கு விளங்கி வந்திருக்கின்றது. ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலங்களின்போது எவ்வாறு பருத்தித்துறையிலிருந்து 'மலையாளத்துடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தனவோ அதேபோன்ற ஒரு தொடர்பினையே கந்தரோடையும் பழைய மலையாளத்துடன் (சேரநாட்டுடன்) கொண்டிருந்தது எனலாம். அத்தொடர்புகளின் பின்னணியில் மலையாள நாட்டு பண்பாட்டு மரபுகள், அங்கண் அம்மைக்கடவை - கந்தரோடைப் பிராந்தியங்களில் நிலைபெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. சாத்துப்படியும், மேளமும் இப்பண்பாட்டுமரபின் எச்சசொச்சமாக இருந்து கொண்டிருக்கின்றன. பெருங்கற்காலப்பண்பாடு, பௌத்தப்பண்பாடு, கண்ணகி வழிபாட்டு மரபு போன்றன ஒரேபிராந்தியத்தில் மாறிமாறி செல்வாக்குச் செலுத்திய தன்மையினை வழுக்கையாற்றுப்பள்ளத்தாக்கில் காணமுடிகிறது. இவற்றுக்கெல்லாம் மையமாக கந்தரோடை விளங்கியிருந்தது. இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட இருக்கும் எதிர்கால ஆய்வுகளே மேலும் பல புதிய தகவல்களைத் தருவதாக அமையும். எனவே புதிய சிந்தனை நோக்கில் அமைந்த இக்கட்டுரையானது மேலும் சிந்திக்கத் தூண்டுமாயின் அதுவே எடுத்துக்கொண்ட நோக்கத்தின் வெற்றியாக அமையும். □□

# தேசாபிமானி

சேர். வோல்ட்டர் ஸ்கொட்
தமிழில்:- வை. சுந்தரேசன்

இது எனது சொந்தநாடு
என ஒருபோதும் தன்னுள்
கூறாமல் சுவாசிப்பவன்
வெறும் நடைப்பிணம்.

அந்நியக் கரையொன்றில்
அலைந்து திரிந்தபின்
சொந்த நாட்டில் மீண்டும்
காலடி பதிக்கையில்
நெஞ்சில் ஒருபோதும்
உத்வேகங் கொள்ளாதவன்
வெறும் நடைப்பிணம்.

அத்தகைய ஒருவனை
நன்றாக அவதானியுங்கள்;
அவன் உயர்பட்டங்களை
தாங்கியிருக்கலாம்;
அவனது பெயர்
பிரபல்யம் பெற்றிருக்கலாம்;
அளப்பரிய செல்வத்தை
விருப்பம் போல்
அடைந்திருக்கலாம்;
பட்டமும் அதிகாரமும்
பெருஞ் செல்வமும்
பெற்றிருந்தும்
சுயநலத்திலே நாட்டமுற்று
வாழும் அந்த ஈனனுக்கு
அவற்றினால் பெருமையில்லை.

இரட்டித்த வேதனையுடன்
அவன் நரகத்திற்குச்
செல்லும்போது
அவன் தோன்றிய
மண்ணிலிருந்து
மனிதர்கள் எவரும்
அவனின் மரணத்திற்காக
கண்ணீர் சிந்தமாட்டார்கள்;
வணக்கம் செலுத்தமாட்டார்கள்;
சோககீதம் பாடமாட்டார்கள். □□

கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளிச் செப்புக் குடத்தை நிரப்பிவிட்டு, கோபுரத்தை அண்ணாந்து பார்த்து நெடுமூச்செறிந் தாள் தங்கேசு.

''முருகா... நீயெண்டாலும் ஒருக்கா கண்ணைத் திறக்க மாட்டியோ?......''

ஆத்திரமும் ஆதங்கமுமாய் வாய் முணுமுணுத்தது! கோயில் மடத்திலும்,



படிப்பது — நாகராசாவின் சயிக்கிள் நிறுத்துவது எல்லாம் இந்தக் 'கராஜ்'க்குள் தான்! அண்ணன் சவூதியில் சேவையர்.

வீட்டில் நிறைய வசதிகள். ''வோட்டர் பம்'' பூட்டி ''ராங்''குக்கு தண்ணீர் நிரப்புவார்கள். அண்ணனின் மூத்தமகள் கிரிஜா ஒவ்வொரு நாளும் பின்னேரங்களில் குறோட்டன் செடிகளுக்குத் தண்ணீர் இறைப்பாள்.

# புதிய முளைகள்

ஆதிலட்சுமி சிவகுமார்

வடக்குப்புற வீதியில் கிளை எறிந்து பரந்து நிற்கும் மருத மரத்தின் கீழும் மூட்டை முடிச்சுக்களோடு கூட்டம் கூட்டமாய்ச் சனங்கள்.

எல்லோர் முகங்களிலும்...... பயம்...... பசி.... தாகம்... துன்பம்... இவர்கள் நேற்றிரவு அச்சுவேலியில் இருந்து ஓடிவந்தவர்கள். ஆண்களிற் சிலர் தேர் முட்டியின் நிழலில் நின்று சுவாரஸ்யமாய் கதை பரப்பிக் கொண்டிருந்தார்கள். இவர்களைப் போலத்தான் தங்கேசுவும்...... உடுத்த உடுப்போடு .. ஊரை விட்டு ஓடி வந்திருக்கிறாள்...

பல மாதங்களாகி விட்டன. கூடிப்பிறந்த அண்ணன் வீட்டுக் ''கார்க் கராஜ்'' தான் இப்போது தங்கேசுவின் வசிப்பிடம்.

''உள்ளே கரிப்புகை படியக்கூடாது......'' இது அண்ணன் மனைவியின் கட்டளை.

வெளித் தாழ்வாரத்தில் மூன்று கற்கள் வைத்து ... ஒரே தடவையில் சமையலை முடித்து விடுவாள் தங்கேசு. சாப்பிடுவது — படிப்பது — பிள்ளைகள்

ஆனால்......

தங்கேசு தண்ணீர் அள்ளுவதும், குளிப்பதும் கோயில் கிணற்றில்தான். தங்கேசு செப்புக் குடத்தை உன்னித்தூக்கி இடுப்பில் வைத்தாள்...... தண்ணீர் பட்டதும் இடுப்பு சில்லிட்டது. நடக்க நடக்க தண்ணீர் குலுங்கி இடுப்பை பநனைத்தது. மூச்சு வாங்கியது. ஒழுங்கை ஓரமாகக் குடத்தை இறக்கி வைத்து விட்டு நின்றாள்.

''கடவுளே...... கட்டேலை யோறவரைக்கும் என்ரை கையையும் காலையும் இயங்க விட்டுடு..''

மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்.

எண்பத்தொன்பதாம் ஆண்டுக் கடைசி......

இந்திய இராணுவம் அவள் கணவனைப் பிடித்தது...... ஏன் பிடித்தார்கள் என்று இன்னும்தான் தெரியாது. அடித்து நொருக்கியதில் அவன் நிரந்தர நெஞ்சு வருத்தக் காரனாகிப் போனான். சயிக்கிள் ஓட முடியாது; பாரம் தூக்க முடியாது; பெலத்து இரும முடியாது... உடனே வாய்க்குள்ளிருந்து இரத்தம் வரும்.

''உழைச்சுத் தராட்டியும் பறவாயில்லை... ஒரு மூலைக்குள்ளை உயிரோடை இருந்தால் காணும்......'' மனதுக்குள் வரிந்து கட்டிக்கொண்டாள். எங்கிருந்தோவொரு வைராக்கியம் வந்து மனதுள் புகுந்தது.

அயந்சனங்களுக்கு மா இடித்துக்கொடுத்தாள்; — தினந்திதிகளுக்குச் சமைத்துக் கொடுத்தாள் — தன்னாலான எல்லாம் செய்தாள்.

ஆறுவயது நகுலனும்... நான்கு வயது ஜனனியும் அவள் சொத்துக்கள்...

''என்ரை குஞ்சுகளை வளர்த்து ஒரு நிலைக்கு கொண்டு வந்திடவேணும்'' மூச்சுக்கு மூச்சு இதைத் தான் நெஞ்சில் பதித்துக் கொள்வாள்.

மூன்றாவது குழந்தையாய்...... நாற்பத்திரண்டு வயதான நாகராசா. அக்கினிக்கும் அருந்ததிக்கும் முன்னால் ''உன்னை என்றும் கைவிடேன்'' என்று சத்தியம் செய்து கைப் பிடித்தவன், இன்று கையாலாகாதவனாக— நடமாடுகின்ற எலும்புக் கோர்வையாக— ஒருநாள் கூட தங்கேசு முகஞ்சுழித்தது கிடையாது. ஐந்தோ... பத்தோ ...கிடைக்கும் பணத்தில் சீவியம் நடத்தினாள். ஆனால்...... அவனுக்குத் தான் தன்மனைவி உலர்ந்து சருகாகிப் போவது நெஞ்சில் வலியை உண்டாக்கியது.

மெல்ல மெல்ல சுருட்டுக் கொட்டிலுக்குப் போனான். வறுமைதான்— வசதியீனம்தான் — ஆனால் இனிமையாகக் குடும்பம் நகர்ந்தது!

□ □ □

ஒரு நாள் விடிகின்ற நேரம். காகம் குருவிகள் கூட இன்னமும் கண்விழிக்காத பொழுது. பலாலிக் காரனுக்கு என்ன வந்ததோ? மளமளவென்று 'ஷெல்'கள் தாறுமாறாக விழுந்து அதிர்ந்தன...... எங்கே விழுகிறதென்று ஊகிக்கமுடியாமல்,... பைத்தியம் பிடித்தவன்போல ஷெல்கள் கூவின... துவக்குச் சூடுகள் தவில் கச்சேரியாய் ஒலித்தன...

''உவங்கள் உப்பிடித்தான் கொஞ்ச நேரம் அமளிப் பட்டுப் போட்டு சுருண்டு போவாங்கள்... பயந்தாங் கொள்ளிகள்...'' போராளிகள் மீதான உறுதியான நம்பிக்கையோடு அவள் எண்ணம் சொல்லிற்று.

அடுப்பில் கிடந்த பானைத் தண்ணீர் மேல்... நீத்துப் பெட்டியில்மாவை அள்ளி வைத்து மூடினாள். சுவாமிநாதன் வீட்டுக்கு நூற்றைம்பது இடியப்பம் கொடுக்கவேண்டும். அடிவளவுக்குப் போன நாகராசா வேர்க்க விறுவிறுக்க வந்தான். ''இ .... இஞ்ச தங்கேசு... ஆமிக்காறன் வாசிகசாலையடிக்கு வந்திட்டானாம்'' அவன் அவளிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே — ஒழுங்கையால் சனங்கள் இடம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள். ''இந்தச் சனம் சும்மா வெருளுது... ஆமி என்னெண்டு இஞ்சை வரும்?...'' அவள் மனம் நம்ப மறுத்தது.

''டும்... டும்...'' மண்டைக்குள் நரம்புகள் சிதறுவது போன்ற உணர்வு...... இந்தப் பிரபஞ்சம் முழு

வதையுமே உலுக்கிவிடும் சத்தம். கரும்புகை... வெடி மருந்து நாற்றம்... தலை கிறுகிறுத்தது! ஓடினார்கள் ...... நகுலனும் ஜனனியும் அழ அழ ஓடினார்கள்...... ஓடிவந்து அண்ணன் வீட்டில் அடைக்கலம் தேடினார்கள்.

ஒருமாதம் ஓடியது.

ஒன்றிரண்டு பேர் துணிந்து ஊருக்குப் போய்ச் சாமான்கள் எடுத்து வந்தார்கள். அடுத்த தடவை போனவர்களோடு, அவள் தடுக்கத் தடுக்க நாகராசா போனான். போய் அவன் கொண்டுவந்த செய்தி, ''வீட்டைக் குண்டு வைத்துத் தகர்த்து விட்டார்கள்'' என்பதுதான்.

தங்கேசு அழுதாள்.... நெஞ்சு வெடித்து உள்ளேயிருந்த துன்பமெல்லாம் உருகும்படி அழுதாள்.

அவளுடைய அழுகை, வீடு தகர்ந்து போய் விட்டதே என்பதற்காகவல்ல; இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் சுவாமிநாதனிடம் இரண்டாயிரம் ரூபா கடன்பட்டு அடுப்படிக்கு தகரமடித்து பூட்டும் போட்டிருந்தாள்.

''அம்மா, அம்மா...'' நகுலன் மூச்சிரைக்க முன்னால் வந்து நின்றான்.

''என்ன குஞ்சு...... என்ன?......''

''உங்களிட்டை சுவாமி மாமா வந்திருக்கு''

நெஞ்சுக்குள் ஒரு தடவை பகீரென்றது.

''இரண்டாயிரம் ரூபா காசு குடுக்க வேணும்...'' வாய் முணுமுணுத்தது. கால்கள் பின்னிப் பின்னி நடக்க மறுத்தன.

வாசலில் சுவாமிநாதன் நின்றார். தங்கேசு குடத்தை இறக்கி வைத்தாள். ஈரச் சீலையை முறுக்கிப் பிழிந்து உதறினாள்.

''நீ இஞ்சை இருக்கிறாய் எண்டு கேள்விப்பட்டு வந்தனான் தங்கேசு. நாங்களும் அகதியா வெளிக்கிட்டு வந்து கிட்டடியிலை தான் இருக்கிறம். உனக்குத் தந்த ரண்டாயிரத்தையும் தந்திடு. எனக்கு கஷ்டமாக் கிடக்கு......''

''எங்கடை வீட்டையும் உடைச்சுப்போட்டாங்களாமண்ணை...... ஒரு சாமானும் எடுத்துக் கொண்டு வரேல்லை...''

''அதுக்கு நானென்ன செய்யத் தங்கேசு. ஏமாத்திப் போடாதை, நாளைக்கு வாறன். பாத்து மாறிவை'' சுவாமிநாதன் எழும்பினார்.

''நாளைக்கு என்னண்ணை... திடீரெண்டு... ...'' -குரல் கெஞ்சிற்று.

''ஏன் உன்ரை அண்ணன் பெஞ்சாதியிட்டை வாங்கித்தாவன்'' -வெடுக்கென்று வந்தது பதில்.

இதயம் சுக்குநூறாய் வெடித்துச் சிதறி...... தங்கேசுவுக்கு தொண்டை வரண்டது.

''நாளைக்கு வருவன், கட்டாயம் வை''

சுவாமிநாதனையே பார்த்துக் கொண்டு நின்றாள் தங்கேசு. கட்டளை காயப்படுத்தியது!

''தங்கேசு .. நாளைக்கு என்ன செய்யப்போறாய்?'' நாகராசாவின் ஏக்கம் கலந்த குரல்......

தங்கேசுவுக்கு தாங்க முடியவில்லை. எத்தனையோ நாட்களாய்த் திரண்டிருந்த துன்பமேகம் கண்ணீராய்க் கொட்டியது.

''அப்ப என்னைப் பிடிச்ச ஆமிக்காரன் சுட்டிருக்கலாம். ஏன் இப்பிடி உசிரோடை விட்டானோ தெரியேல்லை.''

நாகராசாவின் குரலில் விரக்தி...... சோகம்......

"டேய் நகுலன்...... கொம்மா எங்கையடா?" முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த நகுலனை அண்ணன் மனைவி அதட்டுவது கேட்டது.

"ஓம், இஞ்சை இருக்கிறன்"

"இஞ்சை தங்கேசு அவற்றை கூடப்பிறந்த சகோதரம் எண்டு போட்டு உதிலை இருக்க விட்டனான். நாங்கள் இந்த ஊரிலை கௌரவமா இருக்கிறம். எங்கடை கௌரவத்தைக் கெடுத்துப் போடாதேங்கோ"

ருத்திரகாளியாய் தன் முன் நிற்கும் அண்ணன் மனைவியை மிரட்சியோடு பார்த்தாள் தங்கேசு!

"ஏன் மச்சாள் நாங்கள் என்ன செய்தனாங்கள்?"

"பிள்ளையளைத்தேடி நாலுபடிச்ச மனிசர், நாகரீகமான மனிசர் வாற இடம் இது. உங்களிட்டை இப்பிடி கடன்காரர் வந்து போறது எங்களுக்குத்தான் அவமானம் தெரிஞ்சுதே"

எதிர்பார்க்காத இந்தச் சொல் அம்புகள், இராணுவம் ஏவுகின்ற 'ஷெல்' களைப் போலமிகக் கொடியனவாய்......

"எங்களுக்கேன் இப்பிடி ஒரு அவல வாழ்க்கை ..." சகிப்புத்தன்மையின் எல்லையைத் தாண்டி, மனது கோழைத்தனமாகக் குமுறியது.

"அம்மா... அம்மா..." புழுதியும் அழுக்குமாய் தன்முன் நின்ற மகனைப் பார்த்தாள்.

"ஆமிக்காறனை நான் இந்தத் துவக்காலை தானம்மா சுடுவன்" - அவன் கையில் பப்பாசிக் குழல்— கண்களில் உறுதி— தீயில் பொசுங்கிய இதயத்தின் மீது தேன்தடவிய அந்த வார்த்தைகள்......

"ஓ! எங்கடை இந்தத் துன்ப மெல்லாத்துக்கும், அவங்கள் எங்கடை நிலத்திலை இருக்கிறது தான் காரணம். அவங்களைச் சுட்டுக் கலைக்க வேணும்"

அவனுடைய அழுக்கு மேனியை இறுக அணைத்து புழுதி படிந்த உச்சியில் முத்தமிட்டாள். அனைத்துத் துன்பங்களையும் விரட்டிவிட்டு இதயம் ஒரு முறை சிலிர்த்துக் கொண்டது.

□□□

## அறிஞர் "சிரித்திரன்" சிவஞானசுந்தரம் அவர்களின் பாராட்டைப் பெறும் பாடல்கள்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினருக்கு;

ஈழத்து எழுச்சிப் பாடல்கள் என் எண்ணத்தில் எத்தனையோ கற்பனைகளைக் கொண்டு வருகின்றது. தென் இந்திய திரை இசையில் மண்டிக்கிடந்த தமிழினம் இன்று உங்கள் ஒலிப்பதிவுநாடா இலக்கியத்தால் பூத்துக் குலுங்குகின்றதென்றால் மிகையாகாது. இவ்வேளை நான் கண்ணனையும் வாழ்த்துகின்றேன்.

—சி. சிவஞானசுந்தரம்
27-07-1993

கல்லறைகளும் போர்தொடுக்கும்
எங்கள் கல்லறைகளும் போர்தொடுக்கும்
எங்கள் நெஞ்சிலே குண்டது பாய்ந்தாலும்
எங்கள் பொன்னுடல்கள் மண்ணில் சாய்ந்தாலும்
[கல்லறைகளும்]

தாய்தந்தையைப் பிரிந்து வந்தோம்
தாய்நாட்டிலே அன்புகொண்டோம்
சத்தியப் போரிலே எம்முடல் வீழ்ந்தாலும்
இலட்சிய வேங்கையெங்கள் கனவுகள் அழியாது
[கல்லறைகளும்]

வேங்கைகள் நாம் உறுதிகொள்வோம்
தமிழீழ மண்ணினை மீட்டெடுப்போம்
இன்னல்கள் ஆயிரம் வந்தாலும்
இடியாய்ப் பாய்வோம் வென்றிடுவோம்
வீரர்கள் நாம்மடிந்தாலும் வீர சரித்திரத்தில் நிறைந்திருப்போம்
[கல்லறைகளும்]

எங்களின் கல்லறைகள் கோயிலிலும் மேலாகும்
வேங்கைகள் எங்கள் சாதனைகள் அனைத்துக்கும் மேலாகும்
இழந்துவிட்ட எம்தாயகத்தை மீட்டிடும் போரில் நாம் மாண்டாலும்
மாவீரராய் நிலையடைந்து இம்மண்ணில் நாம் புதைந்தாலும்
[கல்லறைகளும்]

போராளியின் பேனாவிலிருந்து..

## கல்லறைக்கோயில்கள்

மகிந்தன்

யாழ் நகரில்

பாடல் ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்
ரீவி, டெக், றேடியோ திருத்துவதற்கும்
வீடியோப்படங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்

## நியூ விக்ரேர்ஸ்

**5, மணிக்கூட்டு வீதி, (*B.M.C.* ஒழுங்கை)**
**யாழ்ப்பாணம்.**

நவீன ஆடைகள், சிறுவருக்கான உடைகள்
என்பவற்றுக்கும்
முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கும்
பெயர் பெற்ற ஸ்தாபனம்

## காவேரி சில்க்ஸ்

**48, பெரியகடை,**
**யாழ்ப்பாணம்.**

கண்பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்

'மொறாய்ஸ்'

விதம்விதமான வடிவங்களில்
உங்கள் தெரிவுக்கேற்ற 'பிறேம்'களில்
மூக்குக் கண்ணாடிகளை வழங்குகின்றோம்.

வைத்திய நிபுணர்களின் ஆலோசனைப்படி தகுந்த
முறையில் 'பல்' கட்டுபவர்கள்

'மொறாய்ஸ்'

உங்கள் விருப்பத்திற்கேற்ற சேவையில்
நிறைவடைகின்றோம்.

மொறாய்ஸ்
50, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

'ஹொட்டேல் பரடைஸ்'

தனது தனித்துவத்துடன் சுவைமிக்க உணவை வழங்குகின்றது.

மரக்கறி, மற்றும் அசைவ உணவு வகைகளுக்கு
யாழ் நகரத்தில்

# ஹொட்டேல் பரடைஸ்

**91, (149) கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தரம் மிக்க ஒரு சைவ உணவகம்

விஷ்ணு விஹார்

(சைவ உணவகம்)

163, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

*வீட்டுப் பாவனைப் பொருட்கள்*
*பால்மா வகைகள்*
*பலசரக்குப் பொருட்கள்*
*என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்*
*பெற்றுக்கொள்ள*

**மணியம் ஸ்ரோர்ஸ்**
**MANNIAM STORES**
பலாலி வீதி, திருநெல்வேலி.

---

*உங்களுக்குத் தேவையான*
*அனைத்துப் பலசரக்குப் பொருட்களையும்*
*பெற்றுக்கொள்ளுங்கள்.*

*குறைந்த விலையில் நிறைந்த பயன் தருவது*

**ஸ்ரீ அம்பாள் பலசரக்கு மாளிகை**
பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி - திருநெல்வேலி.

- பிளாஸ்ரிக் பொருட்கள்
- அலுமினியம், சில்வர் பாத்திரங்கள்
- அழகு சாதனப் பொருட்கள்
- வீட்டுப்பாவனைப் பொருட்கள்

மற்றும்

- விளையாட்டுச் சாதனங்களின்

**ஏக விற்பனையாளர்கள்**

# ராஜா வர்த்தக நிலையம்

**3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**